
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU




முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 24 வெள்ளிக்கிழமை (07.06.2013) பக்கங்கள் 20 ஓசை - 250
















# தெரிவுக்குழுவிற்கு வருகிறது 13 ஆவது திருத்தச் சட்டம்

## மாகாண அதிகார வரம்புகளில் மாற்றம் வருமா?



(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணங்களுக்கு இப்போது வழங்கப்பட்டிருக்கும் அதிகார வரம்புகளில் மாற்றம் செய்வது குறித்து அனைத்துக் கட சிகளும் அங்கம் வகிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் விவாதிக்கப்படவிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் தேவைப்படுமிடத்து 10 ஆவது திருத்தம் தொடர்ந்தும் அவசியமா? இல்லையா? என்பது குறித்தும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அலசி ஆராயப்பட இருக்கிறது.

அரசின் மேற்படி யோசனை குறித்து ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல செய்தியாளர்களுக்கு நேற்றுத் தகவல் வழங்கினார்.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் குறித்தும் 13 ஆம் திருத்தம் தொடர்பிலும் தீர்மானம் எடுக்கவேண்டிய தருணம் இப்போது வந்துவிட்டதாகவும் இதற்காக அரசு ஜனநாயக அணுகு முறையில் அனைத்துக் கட்சிகளினதும் கருத்துக்களை அறிந்தே செயற்படும் என்றும் ஊடக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யோசனை முன்வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தலைவர் என்ற ரீதியில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளத் தயார் என ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்

19 ஆம் பக்கம் பார்க்க

## அதிகாரங்களை வெட்டிக்குறைத்தால் இன நல்லிணக்கம் கருகும்

### மாற்றுக்கொள்கைக்கான நிலையம் அறிவிப்பு

(கொழும்பு)

மாகாணங்களுக்கான அதிகாரங்களைக் குறைக்கும் எந்த முயற்சியும் இன நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் கவனம் செலுத்தி வருவதாகக் குறிப பிட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக 13 ஆம் திருத்தச் சட்டம் மற்றும் மாகாணசபை தொடர்பில் ஆளும் கட்சியின் சிரேஷ்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## "13" குறித்து ஆராய அவகாசம் தேவை

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது அரசியல் திருத்தம் குறித்து தீர்மானம் எடுப்பதற்கு கால அவகாசம் தேவை என்று நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட மேலும் பல சிரேஷ்ட அமைச்சர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மாகாண சபைகளுக்கான அதிகார எல்லைகளை மாற்றும் விடயம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தே முடிவு எடுக்க வேண்டும் என்பதால் இவ்வாறு கால அவகாசம் கோரப்பட்டது.

மாகாண சபைகள் வசம் தற்போது உள்ள அதிகாரங்களில் மத்திய அரசு, மாற்றம் கொண்டுவர விரும்பினால், தற்போது அனைத்து மாகாணங்களும் அங்கீகரித்தால் மட்டுமே அது சட்டமாகும் என்ற நிலையை மாற்றி, பெரும்பான்மை மாநிலங்கள் அங்கீகரித்தாலே போதும் என்ற நிலையை உருவாக்கவும் அரசு ஒரு உத்தேச

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய மாநாட்டுக்கு நியூசிலாந்து ஒத்துழைக்கும்

கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்விற்கு ஆதரவளிக்கப்படும் என நியூசிலாந்து அறிவித்துள்ளது. தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் முரே மெக்யூலி இதனை உறுதி செய்துள்ளார்.வெளிவிவகார அமைச்சர் மெக்யூலி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். கலாசாரம், விவசாயம்,

19 ஆம் பக்கம் பார்க்க

## நல்லூரில் இந்தியக்குழு



யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் நேற்றுக் காலை நல்லூருக்கு விஜயம் செய்தனர். நேற்று காலை 8.30 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோயிலிலுக்கு சென்ற இந்தக் குழுவினர் அங்கு ஏற்பாடு செயயபபட்டிருந்த விசேட பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டனர். இவர்களுடன் யாழ் இந்தியத் துணைத் தூதுவர மகாலிங்கம் மற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவுக் கடலில் இந்திய மீனவர்கள் 25 பேர் கைது

இந்திய மீனவர்கள் 25 பேர் நெடுந்தீவு கடற்படையினரால் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு யாழ். மாவட்ட நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்திய இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 25 மீனவர்கள் இழுவைப் படகில் நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் நேற்று முன் தினம் இரவு

19 ஆம் பக்கம் பார்க்க


## சிவில் சமூகப் பாதுகாப்புக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவும்



(கொழும்பு)

இலங்கையின் சிவில் சமூகப் பாதுகாப்புக்கு அமெரிக்காவின் உதவிகள் தொடரும் என்றும், இதற்காக சட்டம் ஒழுங்கைப் மேம்படுத்தக் கூடிய செயற்றிட்டங்களுக்குத் தொடர்ந்தும் உதவியளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. பத்தரமுல்லவில் அமைந்துள்ள நீதியமைச்சின் ஆய்வு கூடத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சல் சிஸன் விஜயம் செய்துள்ளார். அமெரிக்காவின் உதவியுடன் இந்த நவீன ஆய்வுக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க



## அம்புலன்ஸ் சேவை - இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

கொழும்புக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் , நோயாளர்களின் நலன் கருதி சலுகை அடிப்படையில் அம்புலன்ஸ் சேவையை செய்ய முன்வந்துள்ளது.

தொடர்புகளுக்கு : 077 302 4293, 021 222 2561 (C/2821)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2432 திகதி 05-06-2013

ஆங்கில எழுத்து: U

வெற்றி எண்கள்: 08 14 21 66

போனஸ் இல: 24

ஜக்பொட் பரிசு ரூ. 36,776,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 263486 | 20/- | 5,269,720/- |
| 2 இல | 18823 | 100/- | 1,882,300/- |
| 3 இல | 400 | 1,000/- | 400,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10401 | 40/- | 416,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 702 | 1,000/- | 702,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 36,776,425/- | - |
| 1 இல + போனஸ் இல | 12552 | 100/- | 1,255,200/- |
| 2 இல + போனஸ் இல | 579 | 500/- | 289,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 480 | 200/- | 96,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 31 | 1,500/- | 46,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 307472 | | 13,197,260/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 ஜுன் 08 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 37,494,550/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7 (C/2820)

## அறிவித்தல்

இல. 76 இலந்தைக்குளம் வீதி, அரியாலை எனும் முகவரியில் தற்காலிகமாக வசித்து வரும் பரமநாதன் திருநீலகண்டன் ஆகிய நான் மேற்குறித்த முகவரியில் இருக்கும் எனக்குச் சொந்தமான வீட்டுடன் கூடிய ஆதனத்தை விற்கவோ அல்லது ஈடுவைக்கவோ யாருக்கும் அற்றோனிக் தத்துவம் கொடுக்கவில்லை என்றும், சிலர் போலியான ஆவணங்களைப் பயன்படுத்த முயற்சிப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

ஆகவே இதனை நம்பி யாரும் ஏமாற வேண்டாமெனவும், மேலதிக தகவல்கள் தேவைப்படும் பட்சத்தில் 14 நாட்களுக்குள் மேலே குறிப்பிட்ட முகவரியில் என்னை வந்து சந்திக்கலாம்.

ஒப்பம் : ப.திருநீலகண்டன்

(R/187)

## கண்ணீருடன்...



திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவரும், ஈழத்தின் புகழ் பூத்த சிற்பக் கலைஞனும், சமூக சேவகனுமாகிய கலைஞான பூரணன்

**ஏ.வி. ஆனந்தன்**

அவர்கள் 03.06.2013 இல் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆறாத்துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது இதயம் கனக்கும் கண்ணீரை காணிக்கையாக்கு வதுடன், அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இயக்குநர், அங்கத்தவர்கள்
திருமறைக்கலாமன்றம்

குறிப்பு :

நாளை சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அமரர் ஏ.வி.ஆனந்தன் அவர்களின் பூதவுடல் எமது மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்த்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு எமது மன்றத்தின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

நாளையும், நாளை மறுதினமும் மேடையேற்றப்படவிருந்த 'ஞானசௌந்தரி' இசைநாடகம் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். (C/2824)

### சாரணியப் பாசறை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் சாரணியப் பொறுப்பாசிரியர் அமரர் வீ.ஜெகதீஸ்வரன் ஞாபகார்த்தமாக மத்திய கல்லூரியின் சாரணிய அணியினால் நடத்தப்படவுள்ள சாரணியப் பாசறை நிகழ்வு இன்றும், நாளையும் யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இச்சாரணியப் பாசறை நிகழ்வில் மத்திய கல்லூரியின் சாரணிய அணியைச் சேர்ந்த 65 சாரணிய மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

### செயலமர்வு

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றி வரும் விஞ்ஞான ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு இன்று காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்களை பாடத்திட்டம், ஆசிரியர் கைநூல், எழுது பொருட்கள், பாடநூல் மற்றும் கடந்த கால வினாத்தாள்கள் ஆகியவற்றைக் கொண்டுவருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்தை வழங்கிய
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி
அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும்
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
கௌரவ சில்வேஸ்திரி அலன்ரின் அவர்களுக்கும்
யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர்
உயர்திரு கந்தசாமி கமலேந்திரன் (கமல் தோழர்) அவர்களுக்கும்
வலி.வடக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளரும் வலி.
வடக்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான
இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் (அன்பு தோழர்) அவர்களுக்கும்
எமது உள்ளங்கனிந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்
கொள்வதுடன், அவர்களின் இதுபோன்ற பணி மென்மேலும் சிறக்க
எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.




தெல்லிப்பழை பிரதேசத்தில் புதிதாக
நியமனம் பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள்

(R/188)

# விஞ்ஞான பாட அடைவு மட்டத்தை உயர்த்த யாழ். கல்வி வலயத்தால் விசேட திட்டம்

(அச்சுவேலி)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொது தரா தர சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்களின் விஞ்ஞான பாட அடைவு வீதத்தினை மேலும் மேம்படுத்திக் கொள்வதற்கான விசேட செயற்றிட்டங்கள் யாழ்ப் பாண வலய விஞ்ஞானக் கல்விப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன் முதற் கட்டமாக தரம் 10 விஞ்ஞான பாட உயிரியல் பாட அலகுகளை உள்ளடக்கிய முதலாவது வலய மட்டப் மதிப்பீட்டுப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணி முதல் மதியம் 01.30 வரை நடைபெறவுள்ளது.

இம்மதிப்பீட்டுப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் அந்தந்தப் பிரிவு கோட்டக்கல்வி அலுவலகங்களில் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும்.

பரீட்சைகள் நடைபெற்று முடிவடைந்த பின்னர் விடைத்தாள்கள் உரிய பாடப் பொறுப்பாசிரியர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தமிழ் மொழி மூல மற்றும் ஆங்கில மொழி மூல புள்ளிப் பகுப்பாய்வுகள் 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னதாக தனித் தனியாக யாழ். வலய விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

மேலும் மதிப்பிடப்பட்ட விடைத்தாள்கள் பாடசாலைகளில் பேணப்படுவதுடன் அவை பாடம் சார்ந்த ஆசிரிய ஆலோசகர்களினால் மீள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும் என்றும், சித்திப்புள்ளி 35 ஆகக் கொண்டு சித்தி வீதம் கணக்கிடப்படல் வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு விஞ்ஞான பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ரி.கதிர்காமநாதன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (03)


## மணவாளக்கோலம்

(வரணி)

பருத்தித்துறை கொடிகாமம் பிரதான வீதியில் யா/ வரணி மகாவித்தியாலயத்திற்கருகில் அமைந்திருக்கும் திக்கில் கந்தசாமி ஆலய வருடாந்த மணவாளக்கோல 108 சங்காபிஷேகம் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுமென ஆலய நிர்வாக சபையின் பொருளாளர் தெரிவித்துள்ளார். (150)

# இந்திய அதிகாரிகள் அரியாலைக்கு விஜயம்




(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிசங்கர் பிரசாத், சுரேஸ் பாபு, இந்திய முன்னாள் வெளிவிவகார செயலாளர் விவேக் சுவதீப் குழுவினர் நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு அரியாலை கிழக்கு நாவலடிப் பகுதிக்கு விஜயம் செய்து இந்திய வீட்டுத்திட்டத்தைப் பார்வையிடடனர் வருகை தந்தனர்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அம்பலம் ரவீந்திரதாசன், யாழ். செயலக மாவட்ட உதவிச் செயலர் சா.சுதர்சன் , நல்லூர்ப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.சுரேந்திரநாதன், ஜே/90 கிராம அலுவலர் தேதீஸவரன், இந்திய தூதுவர் மகாலிங்கம், இந்திய வீட்டுதிட்ட அதிகாரி ச.ஸ்ரீகாந், நல்லூரப் பிரதேச சபை உறுப்பினர் ஸ்ரீகணேசா மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர்.

# அழகியல் பாடத்திற்கான பயிற்சிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தர வகுப்பில் அழகியற் பாடத்தினைக் கற்றுவரும் மாணவர்களிற்கான பயிற்சிப் பரீட்சை நடைபெறவுள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால், வலிகாமம் கல்வி வலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றினை பாடசாலைகளுக்கு அனுப்பி, அழகியற்பாட ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பரீட்சையினை நடத்தி மதிப்பீடு செய்து, புள்ளிப் பகுப்பாய்வு செயது மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கும்படி அழகயற்பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி சங்கீதம் I, II உம், 11 ஆம் திகதி நடனம் I, II உம், 12 ஆம் திகதி சித்திரம் I, II உம், 13 ஆம் திகதி நாடகமும் அரங்கியலும் I, II ஆகிய பாடங்கள் காலை 9 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# ஆயுர்வேத மருந்து விற்பனை விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய வைத்தியத் துறையை மேம்படுத்தும் மகிந்த சிந்தனை எதிர்காலத் திட்டத்தின் அடிபபடையில் உள்நாட்டு மருத்துவ சேவை, தரம், பாவனை இவற்றை ஊக்குவிக்கும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் இயங்கும் பாரம்பரிய வைத்தியத்துறைக்கான தேசிய நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு பண்ணை சுகாதார கிராம பிராந்திய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதற்குரிய அழைப்புக்கடிதங்கள் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்புக் கடிதம் கிடைக்காதவர்களும் இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்துகொள்ள முடியும்.

இந்த நிகழ்வானது தரமான மருந்துகளையும், சேவைகளையும் பயனாளிகள் பெற்றுக்கொள்ளக் கூடிய தரம் பேணுவதற்கு அமைவாகவும், அதற்கேற்ப பதிவுகளையும் வசதிகளையும் வழங்கும் முகமாகவும் தமிழ் மொழியில் இந்நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள முதலாவது விழிப்புணர்வுக் கருத்தரங்கு இதுவாகும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு பல்வேறு உதவிகள்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட விழிசுட்டி சங்கானையைச் சேர்ந்த செல்வி டிலக்ஷிகா சந்திரனின் இரத்தப் புற்றுநோய் சிகிச்சைக்கும் வாழ்வாதார உதவிக்குமாக கடந்த செவ்வாய்க்கிழமை 75 ஆயிரத்து 70 ரூபா (75070/=) சர்வதேச புற்றுநோய் தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் வைத்து வழங்கப் பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வகையில் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான பகுப்பாய்வின்போதே விழிசுட்டி சங்கானையைச் சேர்ந்த தரம் 7 இல் கல்வி கற்கும் செல்வி டிலக்ஷிகா சந்திரன் இரத்தப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தமை இனங் காணப்பட்டது.

இதனையடுத்து சபையின் தவிசாளர் மாவட்ட மட்டத்தில் உளள உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்களின் அவசர கவனத்திற்கு மனிதாபிமான திட்டத்தின் கீழ உதவியில் உதவி எனும் தலைப்பின் கீழ் உதவுமாறு பகிரங்க கோரிக்கையை கொண்டு வந்தார். இதனையடுத்து முதற்கட்டமாக,


நல்லூர் பிரதேச செயலகம் 26 ஆயிரம் ரூபாவும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 21 ஆயிரத்து 60 ரூபாவும், வேலணைப் பிரதேச செயலகம் 10 ஆயிரம் ரூபாவும், யாழ். மாநகர சபை 9,360 ரூபாவும், சாவகச்சேரி நகர சபை 2,650 ரூபாவும், வலிகாமம் மேற்கு பிரதேச சபை 8,600 ரூபாவும் வழங்கியுள்ளன.

மொத்தமாக 77,670 ரூபா நிதியாக சேர்க்கப்பட்டு பாதிக்கப்பட்ட செல்வி டிலக்ஷிகா சந்திரனின் கையில் ரூபா 2600 உம் மிகுதி 75,070 ரூபாவை சங்கானை மக்கள் வங்கிக் கணக்கு இல 108-200-17002381 இன் ஊடாக அன்றையதினம் வைப்பிலிட்டு மாணவியின் தாயாரான திருமதி சந்திரன் இராசமலரிடம் வழங்கப் பட்டது. இதேவேளை மாவட்ட மட்டத்திலுள்ள ஏனைய உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள் என்பன இம் மாணவிக்கு உதவுவதற்காக முன்வந்து தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றன.

மேலும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் சபை தவிசாளர் திருமதி. நா.ஐங்கரன் ஊடாக உதவுவதற்கு முன்வருகின்றன.

இதேவேளை செல்வி டிலக்ஷிகா, சந்திரன் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் கல்விப் புலமையில் சிறந்த மாணவியாக திகழுகின்ற தரம் -07 மாணவியுமாவார். இவருக்கு ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களையும் நேரடியாகவோ அல்லது வலி. மேற்கு பிரதேச சபைக்கு ஊடாகவோ உதவுமாறு சபைத் தவிசாளர் திருமதி.நா.ஐங்கரன் கோரிக்கை விடுத்துள்ளார்.





இந்திய ராஜ்சபை பிரதி எதிர்க்கட்சித் தலைவர் ரவிசங்கர் பிரசாத் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு விஜயம் செய்தனர். இதன்போது ஆராத்தி எடுத்து அதிகாரிகள் வரவேற்கப்படுவதையும், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் குழுவினர் கலந்துரையாடுவதையும் காணலாம்.

(படங்கள்: கே.நந்தகுமார்)

## கழிவுப் பொருட்களால் சுகாதார சீர்கேடு

(தும்பாலை)

யாழ்ப்பாணம் மடம் வீதிப் பகுதிகளில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதாக பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே உரிய தரப்பினர் கழிவுப் பொருட்களை அகற்றி போக்குவரத்திற்கு வழி வகை செய்யுமாறு பயணிகளும், அயலில் உள்ள பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

முதல் குற்றத்தை சரி என்று சாதிப்பவன் இரண்டாவது குற்றத்தையும் செய்தவனாகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## எந்தத் தீவில் எங்களது தீர்வு?

அரசியலமைப்பை திருத்துவதற்கான திட்டங்களை தென்னிலங்கையின் மூன்று தரப்புகள் சமீபத்தில் வைத்திருக்கிறார்கள். முதலாவதாக மாதுலுவாவே சோபித்த தேரர் மற்றும் அரசியலமைப்புத் துறை சட்டத்தரணி ஜே.சீ வெலிஅமுன ஆகியோர் ஒரு திட்டத்தை சமர்ப்பித்தனர். பின்னர் ஹெல உருமயவும் அதனை அடுத்து ஐக்கிய தேசிய கட்சியும் வெவ்வேறு திட்டங்களை சமர்ப்பித்துள்ளனர்.

சோபித்த தேரரின் தலைமையிலான குழுவினர் சமர்ப்பித்துள்ள திட்டத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ரத்துச் செய்வது என்ற விடயத்திற்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினையை தீர்ப்பது என்ற விடயத்தில் தெளிவாக எதுவும் இல்லை. ஹெல உருமய கட்சியின் அரசியலமைப்புத் திருத்த நகல், தற்போது அமுலில் உள்ள அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்வதை நோக்கமாக கொண்டது.

ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்திருக்கும் அரசியலமைப்பு நகலில், அதிகாரப் பரவலாக்கல் என்ற தலைப்பின் கீழ் ஐ.தே.க இரண்டு விடயங்களை குறிப்பிட்டுள்ளது. முதலாவதாக ஒற்றை ஆட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கூறுகிறது. இரண்டாவதாக, மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இதுவரை கூறிவந்துள்ளதின்படி அதிகாரப் பரவாக்கலை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

நீங்கள் கூறியபடி அதிகாரப் பரவலாக்கலை அமுலாக்குங்கள் என்று அரசாங்கத்தை அசௌகரியத்திற்குள்ளாக்குவது தான் ஐ.தே.க. வின் நோக்கமே தவிர, அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் அது எந்தப் புதிய திட்டத்தையும் முன்வைக்கவில்லை. ஆனால், அந்நகலில் ஒற்றை ஆட்சியின் கீழ்தான் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தெளிவாக உள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தென்னிலங்கை எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு மகிந்த அரசாங்கத்தை விட மோசமான திட்டங்களுடன்தான் இருக்கிறது என்பது தெளிவாகிறது. மகிந்த அரசை நிர்த்தாரணமாக எதிர்க்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க் கட்சிகளிடமாவது ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அல்லாமல் இந்த நாட்டுக்குள் நம்மைத் தவிர யாருமே சரியில்லை என்று இவர்கள் சொல்லிக்கொண்டிருப்பது, எமது மக்களுக்கான தீர்வை எங்கோ வெளிநாட்டில் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதுபோல் காட்டும் வெற்றுப் பம்மாத்தாகவே தெரிகிறது.

இந்த நாட்டில் தமிழர்களாகிய எங்களைத் தவிர, வேறு யாரும் எங்கள் பிரச்சினையைப் புரிந்துகொள்ள மாட்டார்கள்; அவர்கள் எல்லாரும் விரோதிகள்தான்; எதையும் தர ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் அரசியல் வங்குரோத்துப் பேச்சுக்களை யார்தான் நியாயம் என்று சொல்வார்கள்? "வருவார்கள்; தருவார்கள்" என்று இவர்கள் மக்களுக்குப் பேய்க்காட்டச் சொல்லிக் கொண்டிருக்கும் அந்த சர்வதேசமும் இதில் என்னதான் செய்ய முடியும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முதலில் தங்கள் தீர்வுத்திட்டத்தை பகிரங்கமாக முன்வைக்க வேண்டும். இந்த நாட்டின் மூவின மக்களிலும் கணிசமானோரையேனும் அதிலுள்ள நியாயப்பாடுகளை பரிசீலிக்கத் தகுந்தவையாக எண்ண வைக்கவேண்டும். உடனேயே, "அவர்கள் நம் தேவைகள் எதையும் பரிசீலிக்கவே மாட்டார்கள்" என்று புத்தகத்தை அடித்து மூடிவிடுவது எந்தப் பிரயோசனமும் அற்றது.

நம்மைத் தவிர வேறு யாரையும் நாம் நம்பமாட்டோம் என்பது நம்மில் ஏதோ கோளாறு இருப்பதையே எடுத்துக்காட்டும். இந்த அணுகுமுறை நம்மை எவ்வளவுதூரம் மென்மேலும் பின்னடைந்தவர்களாக்கி வருகிறது என்பதை நமது மக்கள் ஆவேசந் தணித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கடைசியில், கைவசமுள்ள 13-வது திருத்தத்தையும் இழந்துவிட்டு, அதன்பின்னும் "சர்வதேசம் பார்த்துக்கொள்ளும்" கதையைச் சொல்லிக்கொண்டிருப்பது, "பருத்தித்துறை ஊராம் பவளக்கொடி பேராம்" பாட்டாகவே முடியும்.

- ஆசிரியர்

# இலங்கை, சீன உறவை அடுத்து ஒதுங்க வேண்டும் இந்தியா

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

சீன - இலங்கை உறவு விவகாரத்தில் இந்தியா ஒதுங்கி நிற்க வேண்டும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான சீன உறவுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளது இந்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுவது தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

காஸ்மீர் விவகாரத்தில் இந்தியாவுடன் இலங்கை எவ்வாறு தலையிடாமல் இருக்கிறதோ, அதேபோன்று சீனாவுடனான எமது உறவுகள் விவகாரத்திலும் இந்தியா தலையிடக் கூடாது. உண்மையில் சீனாவுடன் இந்தியா மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக உள்ளது. இருநாடுகளும் தமக்கிடையான பிரச்சினைகளை சுதந்திரமாக தீர்த்துக்கொள்ளவேண்டும். ஏனைய நாடுகள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான போர் வலயமாக இலங்கையைப் பயன்படுத்திக்கொள்ள எம்மால் அனுமதிக்க முடியாது.

1962 ஆம் ஆண்டு சீன - இந்தியப் போரின் போது இலங்கை, பர்மா, கானா, கம்போடியா, எகிப்து, இந்தோனேஷியா ஆகிய அணிசேரா நாடுகளின் கூட்டத்தைக் கூட்டி, அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினையை தீர்த்து வைத்தார். அப்போது சிறிமாவோ பண்டாரநாயக்க நடவடிக்கை எடுக்காமல் போயிருந்தால் இந்தியாவின் ஒருபகுதி அப்போதே சீனாவின் கட்டுப்பாட்டில் சென்றிருக்கும். உலகம் முழுவதிலும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் பொருளாதாரங்களில் சீனா முக்கிய மான பங்கை வகிக்கிறது. உலகின் 60 சதவீதமான முதலீட்டு நிதியும், மூலதன வளங்களும் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளன. நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும், அது தான் உண்மை.

இது ஒன்றும் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினையல்ல. இலங்கையின் முன்னேற்றத்தைக் குழப்புவதற்கு வடக்கு மக்களைப் பயன்படுத்த இந்தியா முற்பட்டால் நாமும் அதற்கெதிராக செயற்படுவோம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# மன்னாரில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

எருக்கலம்பிட்டி பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற விபத்தில் தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

தாராபுரத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் உழவு இயந்திரமொன்றில் பயணித்துக் கொண்டிருந்தவேளை எருக்கலம்பிட்டி வீதியூடாக தாராபுரம் கிராமத்திற்கு குறித்த உழவு இயந்திரத்தை [illegible]மாகக் கொண்டுசெல்ல முயற்சித்துள்ளனர்.

இந்நிலையில் உழவு இயந்திரம் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்திற்குள் சென்றுள்ளது. இதன் போது உழவு இயந்திரத்தின் பின்னால் இருந்த இரு இளைஞர்கள் தூக்கி வீசப்பட்டுள்ளனர்.

உழவு இயந்திரத்தில் இருந்த முஹம்மது லதீப் சதாத் (வயது-20) என்ற இளைஞர் தலையில் பலமாகத் தாக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றைய இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்குத் தேர்தலில் கூட்டமைப்பு வென்றாலும் கவலையில்லை

## என்கிறார் அமைச்சர் விமல்

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பரில் நடத்தப்படவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வெற்றி பெற்றாலும் அரசாங்கம் கவலைப்படாது என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஏனென்றால் அதற்கு முன்னர் மாகாணசபைகளின் காணி, பொலிஸ அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விடும். அலரிமாளிகையில் நடந்த கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்தில் மாகாண சபைகளிடம் இருந்து காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிப்பதற்கு சிறுபான்மைக் கட்சிகள் கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. 13 ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்துவது குறித்து இந்தியாவும் மேற்கு நாடுகளும் கவலைப்படுவதையிட்டு அரசாங்கம் கரிசனை கொள்ளக்கூடாது. எமது மக்களுக்கும் நாட்டுக்கும் எது நல்லதோ அதைச் செய்ய வேண்டும். இந்த வெளிநாட்டு சக்திகள் எல்லாம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்து தீவிரவாதத்துக்கு எதிரான போரை நிறுத்த மேற்கொண்ட முயற்சிகளை மறந்து விடக்கூடாது. எனவே அவர்களின் கருத்துகளை நாம் காதில் வாங்கிக்கொள்ளக் கூடாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கி வடக்கில் தேர்தலை நடத்த வேண்டும்

## அரசுக்கு கூறுகிறார் குணதாச அமரசேகர

(கொழும்பு)

13 ஆவது திருத்தத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ஒழிக்காது வேறு திருத்தங்களை ஏற்படுத்தி தேர்தலை நடத்துவதில் எவ்வித பயனும் இல்லை என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார். சௌசிறிபாயவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ஒழிக்காது அரசாங்கம் வடக்குத் தேர்தலை நடத்துமானால் அது பிரிவினைவாதிகளின் ஈழக் கனவை நனவாக்கும். அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தில் தேவையில்லாத திருத்தங்களை ஏற்படுத்தி நாட்டை பிளவுபடுத்த சந்தர்ப்பம் வழங்கக்கூடாது.

எனவே ஜனாதிபதி உடனடியாக 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கிவிட்டு வடக்குத் தேர்தலை நடத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# களஞ்சியசாலை தீ விபத்து இழப்பு நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுக களஞ்சியமொன்றில் அண்மையில் ஏற்பட்டிருந்த தீ விபத்தினால் சுமார் 400 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் சேதமடைந்துள்ளதாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கொழும்பு மேலதிக நீதவான் சந்திக லியனகேவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஷமிகள் சிலரால் அல்லது தனிநபர் ஒருவரால் தீ வைக்கப்பட்டிருக்கலாம் என விசாரணைகளை மேற்கொள்கின்ற பொலிஸார் கருதுவதாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த அனர்த்தம் தொடர்பில் சேதமடைந்த களஞ்சியத்தின் பொறுப்பதிகாரி, நிதிமுகாமையாளர் ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தீ அனர்த்தம் ஏற்பட்ட களஞ்சியத்தில் 32 தன்னியக்க கமராக்கள் காணப்பட்டபோதிலும் அவற்றில் நான்கு கமராக்களில் மாத்திரமே சம்பவம் பதிவாகியுள்ளது.

ஆயினும் அந்த நான்கு கமராக்களின் பற்றறிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதால் சம்பவத்தின் காட்சிகள் தெளிவில்லாமல் இருப்பதாகவும் நீதிமன்றத்திற்கு பொலிஸார் அறிவித்துள்ளனர்.


துறைமுக களஞ்சியத்தில் நள்ளிரவு 12.36 அளவில் தீ அனர்த்தம் ஏற்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதிகாலை 1.02 அளவிலேயே தீ அனர்த்தம் ஏற்பட்டிருக்கக்கூடும் என துறைமுக மின் பொறியியலாளர் விஜித நந்தன தெரிவித்துள்ளார்.

# பாதரசம் என்னும் உயிர்க்கொல்லி

கிருஷ்ணா பிரபு

குழந்தைப் பருவம் மட்டுமே வாழ்வின் அற்புதங்கள் நிரம்பிய காலம். அதில் சேட்டைகளும், சுறுசுறுப்பும், குறும்புகளும் தான் பிரதானம். எல்லா பிள்ளைகளுமே இந்தத் தன்மைகளுடன் பிறந்து, தன்முனைப்புடன் வளர்ந்து விடுவதில்லை. சில பிள்ளைகள் ஓட்டிஸம் ஸ்பெக்ட்ரம் டிஸோர்டர் (ASD) என்ற குறைபாட்டுடன் பிறக்கின்றன. அதற்கான தெளிவான காரணங்களும் கண்டறியப் படாமலே இருக்கின்றன. இதுபோன்ற குழந்தைகளை வளர்ப்பதும், பராமரிப்பதும் சவால் நிறைந்த பணி. வறுமைக் கோட்டில் வாழும் மனிதர்களுக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும் இது போன்ற சிறப்புக் குழந்தைகள் இருந்தால் முறையான வழியில் பயிற்சி கொடுத்துப் பராமரிப்பது சிரமத்திலும் சிரமம் தான்.

தொழில்நுட்பம் வளர்ந்து உச்சாணிக் கொம்பில் இருக்கும் இக்காலத்தில், குழந்தை வளர்ப்பு தான் பெற்றோர்களுக்கான சவாலான விஷயமே. எங்கும் போட்டி நிரம்பிய உலகம் என்பதால் குழந்தைகளும் மன அழுத்தத்தை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். தன்முனைப்புள்ள குழந்தைகளின் உலகம். வேறானது. அவர்கள் ஒருவாறு தம்மை சமூகத்திற்கு ஏற்றவாறு தயார்படுத்திக் கொள்கிறார்கள். என்றாலும் சிறப்புக் குழந்தைகளின் நிலை அப்படியில்லை. அவர்களுக்கு ஆதரவு தேவைப்படுகிறது.



சிறப்புக் குழந்தைகள் என்று வகைப்படுத்தப்படும் மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகள் அனைவரையும் ஒரே பட்டியலில் சேர்க்க இயலாது. அவர்களின் புரிதல் தன்மை மற்றும் தன்முனைப்பின் அடிப்படையில் ஒருவருக்கு ஒருவர் மாறுபட்டு இருப்பார்கள். சுய உணர்ச்சி இல்லாமல் அசையும் திறன் மட்டுமே கொண்டவர்கள் முதல், வெகுளியான முகத்துடன் இனம் காணமுடியாத குழந்தைத் தனத்துடன் இருப்பவர்கள் வரை பல நிலைகளில் இவர்களை வகைப்படுத்தலாம்.

தன்முனைப்புக் குறைபாட்டுடன் ஒரு குழந்தை பிறக்கிறது எனில் அதற்கு இதுதான் காரணம் என்று உறுதியாகக் கூற முடியாமல் ஆராய்ச்சியாளர்கள் குழம்பித் தவிக்கிறார்கள். என்றாலும் சில இரசாயனப் பொருட்களின் நச்சுத்தன்மை தான் மூளைக்குறைபாடு மற்றும் நரம்பியல் பிரச்சினைகளுக்கு மூல காரணமாக இருக்கலாம் என்ற வாதத்தையும் முன்வைக்கிறார்கள்.

"மினமத்தா நோய்" என்பது 1930-களில் ஜப்பானியர்களை மட்டுமல்லாமல் உலகையே உலுக்கித் திரும்பிப் பார்க்க வைத்த முக்கியமான சம்பவம்.

அந்த ஜப்பானியக் கப்பலில் வளர்க்கப்படும் பூனைகளுக்கு மீன்கள் தான் பிரதான உணவு. கடலில் பிடிக்கப்படும் உயிருள்ள மீன்களை துள்ளத் துடிக்கச் சாப்பிட்டு வளர்ந்த திமிர் பிடித்த பூனைகள் அவை. சில ஆண்டுகள் கழித்து அந்தக் கப்பலில் ஒரு வினோதம் நடக்கிறது. வளர்க்கப்படும் பூனைகள் இங்குமங்கும் ஓடி, மேல் தளத்திற்குச் சென்று அங்கிருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொள்கின்றன. அதே மீன்களைச் கொத்தித் தின்னும் சமுத்திரத்தின் மேல் வட்டமடிக்கும் கடற் பறவைகளும் அதைப் போலவே விநோதமாக இறந்துள்ளன. ஆரம்பத்தில் யாரும் இதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பின்னர் காரணம் புரியாமல் குழம்பியிருக்கிறார்கள்.

ஷரானுய் கடலுக்கும், மினமத்தா கடலுக்கும் இடைப்பட்ட நிலப் பகுதியில் "ச்சிசோ கோப்பரேஷனால்" சிறிய தொழில் நகரம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிறுவப்படுகிறது. வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க அப்பகுதியில் உள்ள கிராம மக்கள் விரும்பிக் கேட்டதனால்தான் அதுவும் கூட ஆரம்பிக்கப்படுகிறது. மக்களுக்கும், 1950களுக்குப் பிறகு சில அறிகுறிகள் தென்படத் தொடங்கி இருக்கின்றன. பூனைகள் போல, பறவைகள் போல அவர்களும் தறிகெட்டுத் தவித்திருக்கிறார்கள். மனஅழுத்தம், நரம்பியல் நோய் மற்றும் உடல் சார்ந்த உபாதைகள்... சிலர் தற்கொலை செய்து கொண்டு இறந்திருக்கிறார்கள். யாராலும் தெளிவான காரணத்தை கண்டறியவே முடியவில்லை. பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பிறகு 1959ஆம் ஆண்டு "குமமொடோ பல்கலைக்கழக" விஞ்ஞானிகள் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். மினமத்தா தொழிற்சாலையின் பாதரசக் கழிவுகள் தான் இதற்குக் காரணம் என்பதை உறுதியாகக் கூறுகிறார்கள். ஆரம்பத்தில் இதனை ஏற்க மறுத்த தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தினர் ஆதார பூர்வமாக நிரூபித்ததும் பிறகு மறுக்க முடியாமல் ஏற்றுக்கொள்கிறார்கள்.

தொழிற்சாலை ஆரம்பித்த நாட்களிலிருந்தே "ச்சிசோ கோப்பரேஷன்" தமது உற்பத்திக் கழிவுகளான பாதரசத்தை (மெர்குரி - ர்ப) நேரடியாகக் கடலில் கொட்டியிருக்கிறார்கள். இயற்கையாகப் பூமியில் அமைந்த பாதரசத்தைக் காட்டிலும், செயற்கைக் கழிவுகளாகக் கொட்டப்படும் பாதரசம் பன்மடங்கு நச்சுத் தன்மை வாய்ந்தது. ஆகவே கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இதன் பயன்பாட்டிற்குத் தடை விதித்திருக்கிறார்கள்.


உட்கொள்ளும் உணவுகளின் மூலம், பாதரசத்தின் அடர்த்தி உயிரினங்களில் அதிகமாகும் பொழுது, அது மத்திய நரம்பு மண்டலங்களை பாதிக்கும் என்பதை ஆராய்ச்சிகள் நிரூபணம் செய்கின்றது. மேலும் வளரும் கருவின் மூளைக்கு கடும் சேதத்தை ஏற்படுத்தும் என்றும் கூறுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் மெல்லிய மூளைஅதிர்வு, மனச்சிதைவு, நடுக்கம், உணர்வுத் தடுமாற்றம், குரோமோசோம்களின் பிறழ்வு ஆகியவற்றிற்கும் இது காரணமாக அமைகிறது. கால இடைவெளியில் சேகரமான 0.9 கிராம் பாதரசம் 10 ஹெக்டேர் பரப்புள்ள ஏரியை நச்சுப்படுத்தப் போதுமானது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆகவே தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கொட்டப்பட்ட கழிவுகளால் மினமத்தா கடற்பகுதி மீன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதரசத்தின் விஷத் தன்மை அதன் மூலக்கூறு வடிவத்தைப் பொறுத்து வீரியம் மாறுகிறது. பாதரச ஆவி மற்றும் மெதைல் பாதரசம் ஆகியவை தான் வழக்கமான இதன் வடிவங்களாகும். நேரடியாகவோ அல்லது காற்றிலிருந்து படிவதன் மூலமாகவோ பாதரசம் நீர்ம நிலையை அடையும் போது, இரசாயனச் செயற்பாடு காரணமாக அது மெதைல் பாதரசமாக மாறுகிறது. இது பாதரசத்தின் கொடிய நச்சுத்தன்மை வாய்ந்த வடிவமாகும். எனவே பாதிப்பிற்குள்ளான மீன்களை சாப்பிட்ட பூனைகளும், பறவைகளும் நரம்பியல் சிதைவுக்கு உள்ளாகி, அதன் அழுத்தத்தால் தற்கொலை செய்துகொண்டு உயிரை விட்டுள்ளன. அதே மீன்களை மனிதர்களும் சாப்பிட அவர்களுக்கும் உபாதைகள் ஏற்பட்டுள்ளன.

இன்றைய நிலையில், மின்சாரம் முதல் மின் விளக்குகள் வரை ஏறக்குறைய 1500 பொருட்களைத் தயாரிக்க பாதரசம் மூலப் பொருளாக பயன்படுத்தப் படுகிறதாம். அறை வெப்ப நிலையில் கூட திரவ நிலையில் இருக்கும் ஒரே உலோகம் என்பதால் வெப்பமானிகளில் வெப்பத்தைக் கண்டறிய பெரும்பாலும் இந்த திரவ உலோகம் தான் பயன்படுத்தப்படுகிறது. மின் விளக்குகளிலும், பற்றரிகளிலும், சருமக் களிம்புகள், பெயின்ற், ஓட்ட வீரர்களின் சப்பாத்து, பல்லின் சொத்தையை அடைக்க என பல்வேறு பொருட்களின் உபபொருளாக பாதரசம் பயன்படுத்தப் படுகிறது.

அழகு சாதனப் பொருட்களில் சருமத்தை வெண்மையாக்கும் மற்றும் புற ஊதாக் கதிர்களிலிருந்து பாதுகாக்கும் களிம்பு (Cream) வகைகளில் சதவிகிதம் ஆகும். பாதரசம் தோலின் அடிப்பகுதியிலுள்ள மெலனினைக் கட்டுப்படுத்தி, அதனைப் பரவவிடாமல் தடுத்து சருமத்தை வெள்ளையாக்கவும் பொலிவுடன் வைக்கவும் உதவுகிறது. தோல் பளிச்சென மின்னினாலும் நாளடைவில் பாதிக்கப்படும். நச்சுத் தன்மையுள்ள பாதரசமானது சுவாசம் மூலமாகவும், உணவின் மூலமாகவும், தோலின் மூலமாகவும் உடலுக்குள் செல்லும் தன்மை பெற்றது.

> அந்த ஜப்பானியக் கப்பலில் வளர்க்கப்படும் பூனைகளுக்கு மீன்கள் தான் பிரதான உணவு. கடலில் பிடிக்கப்படும் உயிருள்ள மீன்களை துள்ளத் துடிக்கச் சாப்பிட்டு வளர்ந்த திமிர் பிடித்த பூனைகள் அவை. சில ஆண்டுகள் கழித்து அந்தக் கப்பலில் ஒரு வினோதம் நடக்கிறது. வளர்க்கப்படும் பூனைகள் இங்குமங்கும் ஓடி, மேல் தளத்திற்குச் சென்று அங்கிருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொள்கின்றன. அதே மீன்களைச் கொத்தித் தின்னும் சமுத்திரத்தின் மேல் வட்டமடிக்கும் கடற் பறவைகளும் அதைப் போலவே விநோதமாக இறந்தன.



பாதரசம் கலந்த சோப் மற்றும் க்ரீம் வகைகளைப் பயன்படுத்துவதால், சுற்றுச் சூழல் மாசுபடுவதோடு பிறக்கும் குழந்தைக்கு நரம்பு தொடர்பான பாதிப்பும் ஏற்படுவதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

CFL (compact fluorescent lamp) மின்சார விளக்குகள், குண்டு மின்குமிழ்களை விட சுமார் ஐந்து மடங்கு மின்சாரத்தைக் குறைவாகப் பயன்படுத்துகின்றன. மேலும், ஒரு குண்டு மின்குமிழ் செயலிழக்கும் வரை, சராசரியாக 1,000 மணி நேரம் எரியும் என்றால், ஊகுடு விளக்குகள் அதைவிடப் பலமடங்கு நேரம் எரியக் கூடியவை.

ஒரு சராசரி ஊகுடு விளக்கில் 0.5 மில்லி கிராம் பாதரசம் உள்ளது. கோடிக்கணக்கான வீடுகளில், செயலிழக்கும் ஊகுடு மின்குமிழ்களானது குப்பை மேடுகளிலும், சம தளங்களிலும் வீசப்படுவதை சரியான முறையில் அப்புறப்படுத்துவது கடினமான செயல். இதுவே நீர் நிலைகளிலும், இன்ன பிற நில அமைப்பிலும் ஊடுருவி ஒட்டு மொத்த சமுதாயத்திற்கும் கேடு விளைவிக்கிறது.

ஒரு நாட்டின் இறக்குமதி சார்ந்த கொள்கைகள் அந்தத் தேசத்தின் பொருளாதார ஏற்ற இறக்கங்களை மட்டும் நிர்ணயிப்பதில்லை.

மாறாக மக்களின் உடல் நலனையும், தலைமுறைகளாகத் தொடரும் சிக்கல்களையும், வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் கூட சில சமயம் ஏற்படுத்துவதுண்டு. வளர்ந்த நாடுகளில் பயன்படுத்தத் தடை விதிக்கப்படும் அபாயகரமான பொருட்களை வளரும் நாடுகள் குறைந்த விலைக்கு இறக்குமதி செய்கின்றன. தொழில் வளர்ச்சி என்ற பெயரில் பாதரசம் போன்ற நச்சுக் கழிவுகளை வளரும் நாடுகள் தொடர்ந்து இறக்குமதி செய்வது கடுமையான கண்டனங்களுக்கு உரியது. இது போன்ற முயற்சிகள் பரிணாம வளர்ச்சியின் தேய்மானத்திற்கு நம்மை இட்டுச் செல்லும் என்பதையும் அதிகாரத்தில் உள்ளவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# தேசிய கல்விக்கொள்கையின் கீழ் மத்ரஸாக்களை கொண்டுவர வேண்டும்

## – பொதுபலசேனா வலியுறுத்து



முஸ்லிம் அடிப்படைவாதத்தின் கேந்திர நிலையமாக இலங்கையில் திகழும் மத்ரஸாக்களை தேசிய கல்விக் கொள்கைகளின் கீழ் கொண்டுவர வேண்டும். பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட மத்ரஸாக்களை முஸ்லிம் அடிப்படைவாத பயங்கரவாத சக்திகள் இலங்கையில் விஸ்தரிக்கின்றமை நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலா்ன விடயமாகும் என்று பொதுபலசேனா எச்சரித்துள்ளது.

உலமா சபையின் உண்மையான அடிப்படைவாதக் கொள்கைகள் வெளிச்சத்திற்கு வந்துள்ள நிலையில், தற்போது சூறா சபை ஊடாக முஸ்லிம் அடிப்படைவாத சக்திகள் செயற்பட ஆரம்பித்துள்ளன. இச் சூறா சபைக்கு கட்டாரில் உள்ள முஸ்லிம் அடிப்படைவாதிகளின் தீவிரமானவரான பூசுப் அல்- கர்லான் நிதி மற்றும் ஆலோசனைகளை வழங்க உள்ளார். இவரை இலங்கையிலிருந்து குறிப்பிட்ட சிலர் அண்மையில் போய் சந்தித்தும் உள்ளனர்.

இவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பொதுபலசேனா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பொதுபலசேனாவின் செயலாளர் ஞானசார தேரர் கூறுகையில்,

முஸ்லிம் அடிப்படைவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளை பொது பலசேனா முன்னெடுத்து வருகின்றது. இதன் பிரகாரம் கடந்த காலங்களில் ஹலால் ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இன்னும் ஒரு சில மாதங்களில் முழு அளவில் ஹலால் நாட்டில் இருக்காது. உலமா சபையின் உண்மையான நிலையினை முஸ்லிம் சாதாரண மக்கள் புரிந்து கொண்டு விட்டனர். இவர்கள் அப்பாவி முஸ்லிம் பெண்களின் அனைத்து உரிமைகளையும் பறித்து வெறும் அடிமைகளாக்கும் நிலையே காணப்படுகின்றது.

தற்போது உலமா சபையின் தோலைப் போர்த்திக்கொண்டு சூறா சபை செயற்பட ஆரம்பித்துள்ளது. மத்ரஸாக்களில் சிறுவயது முதலே அடிப்படைவாத சிந்தனைகளை முஸ்லிம் குழந்தைகளின் உள்ளத்தில் விதைத்து மோசமான பயங்கரவாதிகளாக்கும் செயற்பாடே மத்ரஸாக்களில் நடைபெறுகின்றது. இது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும். சட்டம் என்பது ரிசானாவின் கழுத்தை வெட்டிக் கொன்றதை நியாயப்படுத்தியதொன்றாகும். இதனை காட்டுமிராண்டிகளே அனுமதிப்பார்கள். இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு அச்சட்டம் செல்லாது எனக் கூறினார்.

# இலங்கை மீது அழுத்தம் வந்துவிட்டது தருணம்

## – என்கிறது சி.என்.என்.

அமெரிக்கா இலங்கை மீது அழுத்தம் கொடுக்க வேண்டிய நேரம் வந்துள்ளது என்று பிரபல சர்வதேச ஆங்கில ஊடகமான சி.என்.என் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. சி.என்.என் இணையத்தளம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் இந்த விட்யம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் மனித உரிமை எமீறல் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான வன்முறைகள் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் பேரவை வரையில் விவாதிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த விடயங்களில் இலங்கை இன்னும் பொறுப்புடைமையை காண்பிக்கவில்லை.

இந்த நிலையில், சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என்றும் பல்வேறு தரப்பில் இருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. எனவே மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விடயங்கள் தொடர்பில், இலங்கை மீது இந்த தருணத்திலேயே அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் சி.என்.என் செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது.

# 13 ஆவது திருத்தச்சட்டத்தை புலம் பெயர் புலிகள் நிராகரிப்பு

## – கூறுகிறது திவயின

(கொழும்பு)

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை தாம் நிராகரிப்பதாக புலம்பெ்யர் புலிகள் முதல் முறையாக தெரிவித்துள்ளனர் என திவயின கூறியுள்ளது.

13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தினால் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது எனவும் சுயாட்சியே தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வை வழங்கும் எனவும் ஈழ தமிழர் களின் சர்வதேச பேரவை அறிவித்துள்ளது.

அத்துடன் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வடக்கு, கிழக்கில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை நடத்த வேண்டும் எனவும் பேரவை தெரிவித்துள்ளது.

ஒற்றையாட்சி இலங்கைக்குள் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் போன்ற தீர்வுகள் அவசியமில்லை எனவும் பேரவை கூறியுள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

# ஆறு இலங்கையர் ஜோர்தானில் கைது

ஜோர்தானில் ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் இலங்கைப் பணியாளர்கள் ஆறு பேர் அந்நாட்டு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷ் பிரஜையொருவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாக ஜோர்தானிலுள்ள இலங்கைப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் மங்கல ரந்தெனிய தெரிவிக்கையில் இந்தச் சம்பவம் தொடர்பில் தமக்கு அறியக் கிடைத்துள்ளதாக கூறினார்.

ஜோர்தானுக்கான இலங்கைத் தூதரக தொழிலாளர் பிரிவின் உத்தியோகத்தர்கள் சம்பவ் இடத்திற்குச் சென்றுள்ளதாகவும் சமரச முயற்சிகளை சமாதான முறையில் அவர்கள் முன்னெடுப்பார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

# பிரகீத் பிரான்ஸில் உள்ளாரா? ஆச்சரியமடையும் மனைவி

கடத்தப்பட்டு காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட பிரான்சில் வாழ்வதாக, ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்த நிலையில், இதுகுறித்து அவரது மனைவி ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னான்டோ, காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட பிரான்சில் வாழ்வதாக தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

தன்னை மறைத்துக் கொண்டு வேறொரு பெயரில் வாழும் அவரை சந்தித்துப் பேசிய பலரை தான் அண்மையில் சந்தித்ததாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஊடகவியலாளர்கள் பலரும் வெளிநாடுகளில் வாழும் நிலையில் நீதிமன்றங்களில் அவர்கள் காணாமற்போனதாக வழக்குகள் நடாத்தப்படுகின்றன. அவர்களின் மனைவிமார் போராட்டங்களை நடத்துகின்றனர். இதற்கு வெளிநாட்டுத் தூதரகங்கள் துணை போகின்றன.

ஊடகங்களுக்கு முன்னால் அழும் பிரகீத்தின் மனைவி அவருடன் பிரான்சில் வாழ்கிறார் என்றும் அருந்திக பெர்னான்டோ தெரிவித்தார். அவரது இந்தக் கருத்து குறித்து பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்.

இது உண்மையென்றால் அவரது இருப்பிடத்தை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்றும், அவரை கொழும்புக்கு கொண்டு வரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அவரை இலங்கைக்கு திரும்பக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்துக்கு உதவத் தயாராக இருக்கிறேன். தலைமை நீதியரசராக இருக்கும் மொகான் பீரிசும் முன்னர், பிரகீத் வெளிநாட்டில் வாழ்வதாக கூறியிருந்தார்.

அவர் எங்கிருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரிந்தால் அவரை திரும்பக் கொண்டு வருவதற்கு எல்லா உரிமைகளும் உள்ளன.' என்றும் அவர் தெரிவித்துள்ளார்

# தற்கொலைத்தாக்குதலால் சந்திரிகா மூளையில் பாதிப்பில்லை

## – கண்வைத்திய நிபுணர் சாட்சியம்



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வலது கண் முழுமையாக செயலிழந்திருந்த போதிலும் அவருடைய மூளை எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என்று கண் வைத்திய நிபுணர் சரித் பொன்சேகா சாட்சியமளித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது கொழும்பு மாநகர சபை மண்டப வளாகத்தில் 1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக்குண்டுத்தாக்குதல் தொடர்பிலான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி விமல் நம்புவாசம் முன்னிலையிலேயே வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கில் ரகுபதி சர்மா, வேலாயுதன் உதயராசா மற்றும் சந்திரா சர்மா ஆகியோர் மீதே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த மூவருக்கும் எதிராக 190 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு, நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் கண் வைத்திய நிபுணராக கடமையாற்றிய சரித்பொன்சேகா சாட்சியமளித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வலது கண்ணில் காயமொன்றை நான் அன்று சோதித்தேன். அந்தக் காயம் காரணமாக அவரது வலது கண் முழுமையாக செயலிழந்திருந்தது.

வலது கண் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் அவருடைய மூளை எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்றும் அவர் தனது சாட்சியத்தில தெரிவித்தார்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜி.ஜெயக்குமார், சாட்சியமளித்த கண் வைத்திய நிபுணரின் சாட்சியத்தை தான் குறுக்கு விசாரணை செய்யவிரும்பவில்லை என்று நீதிமன்றுக்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து வழக்கு விசாரணையை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

1999 இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலுக்காக கொழும்பு மாநகர சபைத்திடலில் டிசம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற இறுதிக் கட்டப் பிரசாரக்கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக்குண்டுத்தாக்குதலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உட்பட 110 பேர் காயமடைந்ததுடன் 31 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கதாகும்.



சிலாபம், மேல் நீதிமன்றத்தின் நீதிபதி மாலினி குணரத்ன மேன்முறையீட்டு நீதியரசராக நேற்று முன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தை அவர் நேற்று முன்தினம் மாலை பெற்றுக் கொண்டதனைக்காணலாம்.

# எதிர்கால கல்வியின் உயர்வுக்கு முன்பள்ளிக்கல்வியே அடித்தளம்



(கோப்பாய்)

முன்பள்ளிக் கல்வியை சரியாக வழங்குவதன் ஊடாகவே அவர்களின் எதிர்கால கல்வியினை சிறப்பாக மாற்றியமைக்க முடியும் என ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளரும், வலி. கிழக்கு பிரதேச சபையின எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஜங்கரன் தெரிவித்துள்ளார்

அண்மையில் நீர்வேலி வடக்கு பகவான் முன்பள்ளி மாணவர்களின் 2013ஆம் ஆண்டு வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்பள்ளி மாணவர்களின் வகுப்பறையில் இருந்து அவர்களுடைய சிறுவர் பூங்காவரை அழகாக அமைத்து அவர்களுடைய மனங்களில் கல்வி கற்பதற்கான ஆற்றலை உருவாக்கி மாணவர்களின் ஆரம்பக்கல்வியான முன்பள்ளிக் கல்வியை சரியாக அவர்களுக்கு வழங்குவதன் ஊடாகவே அவர்களின் எதிர்காலக் கல்வியினை சிறப்பாக மாற்றியமைக்க முடியும்.

கிராமங்களை புனரமைக்க வேண்டிய வலி.கிழக்கு பிரதேச சபை எந்தவொரு அபிவிருத்திகளும் இல்லாமல் வெறும் சபையாக காணப்படுகிறது.

வலி.கிழக்கு பிரதேசசபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களில் இருந்து வலி.கிழக்கு பிரதேசத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் அனைவரும் துன் பங்களையே எதிர்கொள்கின்றனர். இதற்கு காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்பதை நீங்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் தேசியம் என்றவுடன் உணர்ச்சி பொங்க வாக்களித்த தன் பயனையே இன்று நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றீர்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் உங்களுக்கு தேசியத்தையோ அல்லது அபிவிருத்தியையோ பெற்றுத்தர முடியாது என்பதனை நீங்கள் அனைவரும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் திருமதி.சி.கீதா, நீர்வேலி றோ.க.த.க பாடசாலை அதிபர் த.தர்மரட்ணம், தீவக பிரதிக்கல்விப்பணிப்பாளர் குணநாதன், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் செ.பத் மநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இயங்காத சனசமூகநிலையத்தை செயற்படவைத்த இளைஞர்குழு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாண ஜே/66 பிரிவுக்கு உட்பட்ட ஈச்சமோட்டை சனசமூகநிலையம் இளைஞர் குழுவின் முயற்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது.


பல காலமாக இயங்காமல் இருந்த இச் சனசமூக நிலையத்தினை கடந்த வருடம் முதல் முறையாக நிர்வாக சபை அமைக்கப்பட்டிருந்த பொழுதும் நிர்வாகம் சீரின்மையால் தொடர்ந்தும் சனசமூகநிலையம் இயங்காத சூழ்நிலையே காணப்பட்டது. இந்நிலையில் சனசமூகநிலையத்தை தொடர்ந்து இயங்க வைக்க நிர்வாகத்தின் ஒரு சாரார் பொதுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

எனினும் கடந்த 2ஆம் திகதி பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்தவர்களிடம் நிலையத்தின் தலைமைக்கு தெரியாமல் இக் கூட்டம் கூட்டப்பட்டதாகவும் இதில் தம்மால் எவ்வித அறிக்கையும் சமர்ப்பிக்க முடியாது என நிர்வாக தலைமை கூறியதை அடுத்து யாழ்.மாநகரசபை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுக்கொண்டதற்கமைய பிறிதொரு தினத்தில் கூட்டம் கூட்டப்படுமென அறிவிப்பு விடுக்கப்பட்டது தொடர்ந்து பொதுக் கூட்டத்திற்கு வருகைதந்தவர்கள் கலைந்து சென்றனர்.

தொடர்ந்தும் அதே நிலையில் சனசமூக நிலையம் இருந்ததினை உணர்ந்த இக்கிராம இளைஞர் குழுவினர் தாமாகவே முன்வந்து நிலையத்தின் திருத்த வேலைகளினை மேற் கொண்டு நிலையத்தில் பத்திரிகையிட்டு நிலையத்தினை இயங்கச் செய்துள்ளனர்.

இளைஞர் குழுவினால் நிலைய சூழலில் தகாத செயல்கள் இடம்பெறுவதாக இருந்த சூழ்நிலையில் இவ் இளைஞர்களின் முன்மாதிரியான செயலினையும், அயல் கிராம மான பாசையூர் அந்தோனியார் ஆலய திருவிழா நேரத்தில் அத் திருவிழா யாத்திரிகர்களுக்கு இடையூறு இன்றி இருப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட இச் செயற்பாட்டிற்காக இக் கிராம மக்கள் இளைஞர்களுக்கு பெரும் பாராட்டைத் தெரிவித்துக் கொண்டனர். (42)

# சைக்கிள் பாதுகாப்பு கட்டணம் மாற்றம் செய்யப்பட்டு அறவீடு




(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொடிகாமம் பொதுச் சந்தையில் துவிச்சக்கர, மோட்டார் சைக்கிள்களுக்கான கட்டணங்கள் (ரிக்கற்றில்) அச்சிட்ட கட்டணத்தை விட பேனாவால் கூடுதலாக பணப்பெறுமதி இடப்பட்டு அறவிடப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபையினால் துவிச்சக்கரவண்டிக்கு நான்கு ரூபாவாகவும், மோட்டார் சைக்கிளுக்கு ஐந்து ரூபா வீதமும் பொறிக்கப்பட்டுள்ளது. இதேரிக்கற்றில் பேனாவால் துவிச்சக்கர வண்டிக்கு 5 ரூபாவாகவும், மோட்டார் சைக்கிளுக்கு 8 ரூபாவீதமாகவும் தற்போது அறவிடப்படுவதாகவும் இது தொடர்பாக பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

# எரிபொருள் நிலையம் திறப்பு

(கரணவாய்)

புதுக்குடியிருப்பு பல.நோ.கூட்டுறவு சங்கத்தால் பொதுமக்களின் பாவனைக்காக எரிபொருள் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இந்நிலையம் திறக்கப்பட நிலையில் ஒரே நேரத்தில் 10 வாகனங்கள் தரித்து நின்று எரிபொருளை நிரப்பக்கூடியதாக எரிபொருள் நிரப்பு நிலையம் விசாலமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பிரதேச மக்கள் சிரமமின்றி எரிபொருளை பெறக்கூடியதாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (18)

# கொடியேற்றம்

(அச்சுவேலி)

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (85)

# பாடசாலை மதியஉணவுக்கு கொடுப்பனவு வழங்கல்

(வலிகாமம்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்கென வழங்கப்பட்டு வரும் பச்சை மரக்கறி, முட்டை, என்பவற்றுக்கான பணக்கொடுப்பனவு பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக கணக்காளர் அறிவித்துள்ளார்.

இக்கொடுப்பனவு 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர், நவம்பர் மாதத்திற்கான கொடுப்பனவு எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒக்ரோபர் மாத முட்டைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ள பாடசாலைகளிற்குரிய மேற்படி முட்டைக்கொடுப்பனவு, மார்ச், ஏப்ரல், மே மாத மரக்கறிக்கொடுப்பனவில் சீர்செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# முரசின் இன்றைய பலன்

(07.06.2013 - வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 24 ஆம் திகதி.
நட்சத்திரம் கார்த்திகை மாலை 06.06 வரை. திதி - சதுர்த்தி முன்னிரவு 07.47 வரை. இராகுகாலம் 10.22 - 11.52 வரை.
சுபநேரம் 05.52 - 07.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முன்னர் எதிராகச் செயற்பட்டவர் விலகுகிற நன்னிலை உருவாகும். புதிய திட்டங்களை வழிவமைப்பீர்கள். தொழிலில் வளர்ச்சி அதிகரிக்கும். ஆதாய பணவரவு. கடனில், ஒரு பகுதி தீரும். பிள்ளைகளால் புது நன்மை வந்து சேரும். |
| ரிஷபம் | முடிக்க வேண்டிய வேலை தாமதம் ஆவதால், சஞ்சலம். நண்பரின் உதவியால், மாற்று உபாயம். தொழிலில் அளவான விருத்தி. புதிய செலவு ஒன்று வரலாம். உடல்நலம் பாதுகாக்க ஒவ்வா உணவு தவிர்க்கவும். இசையை ரசித்து ஓய்வு. |
| மிதுனம் | மனதில் உற்சாகமும், செயல்களில் நேர்த்தியும் உருவாகும். தொழிலில், வியத்தகு அளவில் முன்னேற்றம். பணவரவும், நன்மையும் கூடும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டம். உத்தியோகத்தர்களுக்கு, பொறுப்பான பதவி அனுகூலம். |
| கடகம் | எவரிடமும் இனிய சொற்களால் பேசுவீர்கள். சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், திட்டமிட்ட வளர்ச்சி இலக்கைப் பூர்த்தி செய்வீர்கள். உபரி வருமானம். இல்லறத்துணை விரும்பியது வாங்கித் தருவீர்கள். |
| சிம்மம் | நண்பரின் பேச்சு மனவருத்தம் தரும். நியாயம் உணர்த்தி அவர் மனதை மாற்றுவீர்கள். தொழில், தாமத கதியில். சிக்கனம் சிரமம் தவிர்க்க உதவும். உடன் பிறந்தவர் ஆதரவாக செயற்படுவர். பிள்ளைகளின் வளர்ச்சியில் மனநிறைவு. |
| கன்னி | ஓரளவு அறிமுகமானவர் சுயஇலாபத்திற்காக வலிய வந்து உதவுவர். தவிர்ப்பது நல்லது. தொழிலில் கூடுதல் முயற்சி, உழைப்புத் தேவைப்படும். குடும்ப பணச் செலவு கூடும். வெளியூர் பயணத்திற்கு வாய்ப்புண்டு. உடல்நலம் குறைவுபடலாம். |
| துலாம் | பகைமையுடன் பேசுபவரிடம், விலகுவது நல்லது. நண்பரின் ஆலோசனை நன்மை தரும். தொழில், தேங்கியிருந்த வளர்ச்சி சீராகும். அளவான பணவரவு. நிர்ப்பந்தத்திற்காக, உடன் தேவையில்லாப் பொருள் வாங்காதீர். சீரான ஓய்வு நல்லது. |
| விருச்சிகம் | உங்கள் கவலைகளை, பிறரிடம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம். தொழிலில் இலக்கை நிறைவேற்ற, காலம் தேவைப்படும். செலவு கூடும். உடல் நலத்திற்கு உணவில் கவனம். தியானம், வழிபாட்டால் மனதில் அமைதி ஏற்படும். |
| தனுசு | உத்வேகமாக வேலை செய்வீர்கள். தொழில் செழிப்பு. அதிக இலாபம் கிடைக்கும். வீட்டை அழகுபடுத்துவீர்கள். உத்தியோகத்தர்க்கு, தாமதமான சலுகை வந்து சேரும். அரசின் உதவி வரும். பழைய நண்பரின் சந்திப்பு மகிழ்விக்கும். |
| மகரம் | முக்கியமான ஒருவர் உங்களை அறிந்து கொள்ளும் அனுகூலம். தொழிலில் திட்டமிட்டவற்றை நிறைவேற்றுவீர்கள். பணவரவு திருப்திகரம். விருந்து, விசேஷம். சுபநிகழ்ச்சி ஒன்றுக்கும் திட்டமிடுவீர்கள். பெண்கள் அணிகலன் வாங்குவர். |
| கும்பம் | வேலையில், கவனக்குறைவால் சில சிரமங்கள் உண்டாகும். தொழில், சில குறைகளை சரி செய்ய வேண்டும். தாராள வரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். பிறர் பார்வையில் பகட்டாக இருக்க வேண்டாம். மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். |
| மீனம் | திட்டமிட்ட வேலை நிறைவேறும். மனதில் புத்துணர்வும், நம்பிக்கையும் கூடும். தொழில், கூடுதல் மூலதனம் செய்வீர்கள். கடன் வசூலாகும். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி. வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். |

# அரையிறுதியில் முன்னணி வீரர்கள்



(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு ரபெல் நடால், ஜோகோவிச், அசரன்கா, மரியா ஷரபோவா ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் ஸ்பெயினின் நடால், சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்காவை சந்தித்தார். அபாரமாக ஆடிய நடால் 6–2, 6–3, 6–1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் உலகின் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஜேர்மனியின் டொமி ஹாசை சந்தித்தார். இதில் ஜோகோவிச் 6–3, 7–6, 7–5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார். அரையிறுதியில் நடால், ஜோகோவிச் மோதவுள்ளனர்.

பெண்கள் பிரிவில் காலிறுதி ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியனும், 2ஆம் நிலை வீராங்கனையுமான ரஷ்யாவின் மரிய ஷரபோவா, முன்னாள் முதல்நிலை வீராங்கனை சேர்பியாவின் ஜோன்கோவிச்சுடன் மோதினார். இதில் அதிர்ச்சிகரமாக முதல் செட்டில் 0–6 என்ற கணக்கில் ஷரபோவா பறிகொடுத்தார்.ஆனால் அதன் பின்னர் ஆக்ரோஷமாக எழுச்சி கண்ட ஷரபோவா அடுத்த இரு செட்களை தனதாக்கி 0–6, 6–4, 6–3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் 3ஆம் நிலை வீராங்கனை பெலாரசின் விக்டோரியா அஸரென்கா, 12ஆம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் மரிய கிரிலென்கோவை எதிர்கொண்டார். இதில் அபாரமாக ஆடிய விக்டோரியா அஸரென்கா 7–6 (7–3), 6–2 என்ற நேர் செட்டில் வெற்றியை சுவைத்து அரையிறுதிக்கு முன்னேறினார். பெலராரஸ் நாட்டுக்காக பங்கேற்ற ஒரு வீராங்கனை பிரெஞ்ச் ஓப்பன் வரலாற்றில் அரையிறுதியை எட்டுவது இதுவே முதல் முறையாகும்.



# ஆறுதல் வெற்றி

(லண்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி ஆறுதல் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இயன் பெல் 82, மோர்கன் 49, பட்லர் 47, ட்றொட் 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மக்க்லனக்லர்ஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 288 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி, 46.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் குப்ரில் 38, றெய்லர் 71, கௌத்தி, நதன் மக்கலம் ஆகியோர் தலா 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பின், புறொட், பிரென்ஸன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி ஆறுதல் அடைந்தது. இதேவேளை, மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை நியூசிலாந்து அணி 2–1 என்ற கணக்கில் கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக பட்லர், தொடர் நாயகனாக குப்ரில் தெரிவானார்.

# மன்னிப்புக் கோரும் அஷ்ரபுல்

போட்டி நிர்ணயத்தில் ஈடுபட்டமைக்காக பங்களாதேஷ் அணியின் கிரிக்கெட் வீரர் மொஹமட் அஷ்ரபுல் அனைவரிடமும் மன்னிப்புக் கோரியுள்ளார். தனது செய்கைக்காக வருத்தமடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிப்படையாகவே தான் மிகவும் தாழ்வாக உணர்வதாகத் தெரிவித்த மொஹமட் அஷ்ரபுல், தனக்காகப் பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுவதாகத் தெரிவித்தார்.

இவ்வாண்டு இடம்பெற்ற பங்களாதேஷ் பிரிமியர் லீக் தொடரில் போட்டிகளை வேண்டுமென்றே தோற்றார் என்ற குற்றச்சாட்டில் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவினால் விசாரணைக்குள்ளாக்கப்பட்டு வரும் மொஹமட் அஷ்ரபுல், அவர்களிடம் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த அஷ்ரபுல், நான் தவறு செய்ததை சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவு என்னை அழைத்தமை இதுவே முதற்தடவையாகும். நான் சில தவறுகளைச் செய்துள்ளேன். எனது குற்றத்தை அவர்களிடம் ஒப்புக் கொண்டுள்ளேன். கிரிக்கெட்டிற்கு உதவும் முகமாக, எனது தவறுகள் குறித்து அவர்களிடம் தெரிவித்துள்ளேன். அவர்களும் உதவி செய்ய முயற்சிப்பதாகத் தெரிவித்தனர். எனது தவறுகளுக்காக முழு நாட்டிடமும், எனது இரசிகர்களிடமும், நண்பர்களிடமும் மன்னிப்பைக் கோரி நிற்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒப்பந்தம்



ஐரோப்பிய கால்பந்து லீக் போட்டிகளில் பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாட பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மார் டா சில்வா சான்டோஸ் ஜூனியர் (வயது–21) 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்காக பார்சிலோனா அணிக்கு ரூ.422 கோடி செலவாகி உள்ளது. உலகிலேயே அதிக தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள வீரர்களில் அவர் 8ஆவது இடம் பிடித்துள்ளார். பிரேசில் அணிக்காக 33 போட்டிகளில் விளையாடியுள்ள நெய்மார் 20 கோல் அடித்துள்ளார். உலகின் தலைசிறந்த வீரரான மெஸ்ஸியும் (ஆர்ஜென்ரீனா) பார்சிலோனா அணிக்காக விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

# எஸ்.எல்.பி.எல். திட்டமிட்டபடி நடைபெறும்

சிறிலங்கன் பிறீமியர் லீக் (எஸ்.எல்.பி.எல்.) தொடர் ஏற்கனவே திட்டமிட்டபடி இடம் பெறும் என விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சரின் கருத்துக்களைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தின் பின்னரே இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்கான சிறிலங்கன் பிறீமியர் லீக் தொடர்பாகப் பிரச்சினைகள் காணப்படுவதாகத் தெரிவித்திருந்த மகிந்தானந்த அளுத்கமகே, அணி உரிமையாளர்கள் தொடரிலிருந்து விலகுவதாகவும், இவ்வாண்டுக்கான தொடர் சந்தேகத்தில் உள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் விளையாட்டுத்துறை அமைச்சரின் கருத்துக்களை முரண்படுத்தி இன்று புதிய தகவலை வெளிப்படுத்தியுள்ள விளையாட்டுத்துறை அமைச்சு, திட்டமிட்டபடி சிறிலங்கன் பிறீமியர் லீக் தொடர் இடம்பெறும் எனத் தெரிவித்துள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு அணியும் இவ்வாண்டுக்கான தொடரில் பங்குபற்ற முடியாது என அறிவித்திருக்கவில்லை எனத் தெரிவித்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சு, ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி ஓகஸ்ட் 10ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 07ஆம் திகதி வரை சிறிலங்கன் பிறீமியர் லீக் தொடர் இடம்பெறுமென்பதை உறுதிப்படுத்த விரும்புவதாகத் தெரிவித்துள்ளது. சிறிலங்கன் பிறீமியர் லீக் தொடர் இடம்பெறும் காலத்திலேயே கரிபீயன் பிறீமியர் லீக் தொடரும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சச்சினுக்கு வாய்ப்பு

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த மும்பை இந்தியன்ஸ் வீரர் சச்சின் டெண்டுல்கர், இந்தியாவில் செப்ரெம்பர் 17ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 6ஆம் திகதி வரை நடைபெறும் சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட்டில் விளையாட வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் இந்த முறை இந்தியாவில் நடக்கிறது. அதனால் குறைந்தது இந்த ஒரு போட்டியிலாவது விளையாடுவது குறித்து பரிசீலிக்கும்படி டெண்டுல்கரிடம் மும்பை அணி நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. அவருக்கு மிகப்பெரிய இரசிகர்கள் பட்டாளம் உள்ளது.எனவே அவர்விளையாடினால், அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐ.பி.எல். மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தகுதிபெற்றது ஜப்பான்



அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு ஜப்பான் தகுதிபெற்றுள்ளது.

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான தகுதி காண் போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக்கொண்டதன் மூலம்ஜப்பான் இந்த வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது.

தொடர்ச்சியாக ஐந்தாவது முறையாகவும் ஆசியப் பிராந்தியத்தில் இருந்து ஜப்பான் அணி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தகுதி பெறுவது மாத்திரம் போதுமானது அல்ல. பிரேசிலில் சிறப்பாக செயற்பட எதிர்பார்த்துள்ளதாக ஜப்பான் கால்பந்தாட்ட அணியின் முகாமையாளர், தெரிவித்துள்ளார்.

# மாகாண மெய்வல்லுநர் சாதனைகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் அடுத்த மாதம் 4,5,6,7,8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. மாகாண வீர,வீராங்கள் இப்போட்டிக்கு தங்களைத்தயார்ப்படுத்தும் வகையில், கடந்த ஆண்டு மாகாண, தேசிய மட்டப்பெறுபேறுகள் இணைக்கப்பட்டுள்ளது. இதில் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பெறுபேறு வருவமாறு: (42)

**15 வயதுப் பிரிவு ஆண்கள்**

| நிகழ்ச்சி | வடமாகாண சாதனைகள் | வடமாகாண நிற விருது | தேசிய மட்ட முதலிடம் | தேசிய மட்ட சாதனைப்பதிவு |
|---|---|---|---|---|
| 100 மீற்றர் | 00.12.03 | 00.12.04 | 00.12.03 | 00.11.44 |
| 200 மீற்றர் | 00.25.04 | 00.250.4 | 00.24.03 | 00.23.52 |
| 400 மீற்றர் | 00.58.02 | 00.57.05 | 00.53.79 | 00.52.35 |
| உயரம் பாய்தல் | 1.75 | 1.65 | 1.75 | 1.86 |
| நீளம் பாய்தல் | 5.54 | 6.00 | 6.22 | 6.4 |
| குண்டு தள்ளுகை | 10.19 | 11.5 | 12.10 | 15.79 |
| தட்டெறிதல் | 33.6 | 35 | 45.22 | 49.57 |
| 100 மீற்றர் தடை தாண்டல் | 0017.03 | 00.17.03 | 00.14.45 | 00.13.73 |
| 4X100 மீற்றர் | 00.51.04 | 00.49.05 | 00.47.01 | 00.45.70 |
| 4X400 மீற்றர் | 04.05.09 | 03.55.00 | 03.50.3 | 03.41.89 |

**15 வயதுப் பிரிவு பெண்கள்**

| நிகழ்ச்சி | வடமாகாண சாதனைகள் | வடமாகாண நிற விருது | தேசிய மட்ட முதலிடம் | தேசிய மட்ட சாதனைப்பதிவு |
|---|---|---|---|---|
| 100 மீற்றர் | 00.14.02 | 00.14.01 | 00.13.01 | 00.12.62 |
| 200 மீற்றர் | 00.29.01 | 00.28.09 | 00.26.66 | 00.26.00 |
| 400 மீற்றர் | 01.06.08 | 59.99.00 | 00.59.83 | 00.59.74 |
| உயரம் பாய்தல் | 01.35 | 01.36 | 01.57 | 01.67 |
| நீளம் பாய்தல் | 04.73 | 04.73 | 05.43 | 05.45 |
| குண்டு தள்ளுகை | 07.88 | 07.88 | 09.77 | 10.10 |
| தட்டெறிதல் | 23.72 | 25.00 | 29.07 | 32.55 |
| ஈட்டி எறிதல் | 23.86 | 23.86 | 26.75 | 35.04 |
| 100 மீற்றர் தடை தாண்டல் | 00.20.00 | 00.17.03 | 00.16.43 | 00.15.60 |
| 4X100 மீற்றர் | 00.57.00 | 00.56.00 | 00.52.17 | 00.51.20 |
| 4X400 மீற்றர் | 04.52.06 | 04.50.05 | 04.19.04 | 04.16.77 |

## மாகாண பாடசாலைகளுக்கிடையிலான
# ஹொக்கி, கூடைப்பந்து

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட ஹொக்கி மற்றும் கூடைப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

இதில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை சென். ஜோண்ஸ் கல்லூரியிலும், 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை யாழ். மத்திய கல்லூரி மற்றும் வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலையிலும் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகளை குறித்தநேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் கேட்டுள்ளார். (93)

# அராலியில் இன்று அரையிறுதி ஆட்டம்


(அராலி)

அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளது.


அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் பாரதி அணியை எதிர்த்து றோயல் அணியும், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து சென். நிக்கலஸ் அணியும் மோதவுள்ளன. இப்போட்டியில் வெற்றிபெறும் அணி நாளைய தினம் மாலை இடம்பெறும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (180)

# கிளி-முல்லை நட்புறவு கிரிக்கெட்

## 4 வருடங்களின் பின் இன்று ஆரம்பம்



கிளிநொச்சி மகாவித்தியாலயம்



புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

(புதுக்குடியிருப்பு)

கிளிநொச்சி மகாவித்தியாலய அணிக்கும், முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்குமிடையிலான கிளி.முல்லை நட்புறவுக் கிண்ண இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்றைய தினம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் கிரிக்கெட் வரலாற்றில் முதன்மை மிக்க தொடராக விளங்கும் இத்தொடர் கடந்த 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் 2008ஆம் ஆண்டு வரை சிறப்புற நடைபெற்றது.

இதன் பின்னர் இடம்பெற்ற இடப்பெயர்வுகள் காரணமாக கடந்த நான்கு வருடங்கள் இத்தொடர் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் மீண்டும் புதுப்பொலிவுடன் இக்கிரிக்கெட் தொடர் ஆரம்பிக்கப்பட்டிருப்பது இரு மாவட்டங்களின் கிரிக்கெட் ஆர்வத்தை வெளிப்படுத்தி நிற்கும் அதேவேளை, கிரிக்கெட்டில் சாதிக்க வேண்டும், புதிய சூழலில் தமது பாடசாலைகளிலிருந்தும் தேசிய அணிக்கு திறமை மிக்க வீரர்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றது. அத்துடன் இரு மாவட்டங்களுக்கிடையிலான நட்புறவை வலுவாக்கிக் கொள்ளவும் இத்தொடர் பெரும் துணையாக அமையும் வழிவகுக்கும்.

இத்தொடரில், கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற முதல் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுற்றது. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி கன்னி வெற்றியைப் பதிவாக்கியிருந்தது.

இந்நிலையில் புதுப்பொலிவுடன் மூன்றாவது போட்டி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இன்று பிற்பகல் 1.00 மணி முதல் ஆரம்பமாக வுள்ளது. இப்போட்டியில் வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ளும் முனைப்புடன் இரு அணிகளும் களமிறங்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

கடந்த நான்கு வருடங்களாக இப்போட்டி மீண்டும் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று தவித்து வந்த அதன் ஆதரவாளர்கள், இரசிகர்கள் விருப்பை நிறைவு செய்யும் வகையில் இரு அணிகளும் களத்தில் தமது செயற்பாட்டை வெளிப்படுத்தி வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள இறுதி வரை போராடும்.

எனவே, கிளி. முல்லை நட்புறவுக் கிண்ணம் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி இறுதிப் பந்து வரை விறுவிறுப்பாக நடைபெறும் என்று நம்பலாம். (எஸ்.பி.,02)

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டி முடிவுகள் வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலனினால் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த 4ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இக்கராத்தேப் போட்டியில் தனிக்காட்டா மற்றும் குழுக் காட்டா, சண்டைப் போட்டிகள் இடம் பெற்றன.

இதில் 15, 17, 19 வயதுப் பிரிவு வீர,வீராங்கனைகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றது.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்டோர் விபரம் வருமாறு:

**தனிக் காட்டா ஆண்கள்**

15 வயதுப் பிரிவு

முதலாமிடம் தனுசன் (சென்.ஜோண்ஸ் கல்லூரி), இரண்டாமிடம் முரளி (ஊற்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி), மூன்றாமிடம் விதுர்சன் (வவுனியா சி.சி. தமிழ் மகாவித்தியாலயம்)

17 வயதுப் பிரிவு

முதலாமிடம் அலிக்குமரன் (வல்வெட்டித்துறை வேலாயுதபுரம் மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் துஷ்யந்தன் (சென். ஜோண்ஸ் கல்லூரி), மூன்றாமிடம் றினாஸ் ( வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்)

19 வயதுப் பிரிவு

முதலாமிடம் சுகிர்தன் (ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி), இரண்டாமிடம் இளங்கீரன் (சென். ஜோண்ஸ் கல்லூரி), மூன்றாமிடம் ஜனுசன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

**தனிக் காட்டா பெண்கள்:**

15 வயதுப் பிரிவு

முதலாமிடம் சிந்துஜா (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம் துவாரகா (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), மூன்றாமிடம் தமிழ்நிலா (கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

17 வயதுப் பிரிவு :

முதலாமிடம் சர்மிளா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் கஜனி (கைதடி நவீல்ட் பாடசாலை), மூன்றாமிடம் சிவாஜினி (கைதடி நவீல்ட் பாடசாலை)

19 வயதுப் பிரிவு:

முதலாமிடம் நிதுஜா (கிளி. கனகபுரம் மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் கோகுலவாணி (முல்லைத்தீவு மகாவித்தியாலயம்), மூன்றாமிடம் பிரதீபா (முல்லைத்தீவு மகாவித்தியாலயம்)

**சண்டைப் போட்டி ஆண்கள்:**

15 வயதுப் பிரிவு:

முதலாமிடம் றோசான் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), இரண்டாமிடம் கிர்சோம் (நாச்சிக்குடா ஜி.எம்.எம்.எஸ்), மூன்றாமிடம் தனுசன் (சென். ஜோண்ஸ் கல்லூரி)

17 வயதுப் பிரிவு :

முதலாமிடம் அலிக்குமரன் (வல்வெட்டித்துறை வேலாயுதபுரம் மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் நிசாத் (நாச்சிக்குடா ஜி.எம்.எம்.எஸ்), மூன்றாமிடம் பிரதீபன் (முத்தையன்கட்டு ஜி.ரி.எம்.எஸ்)

19 வயதுப் பிரிவு :

முதலாமிடம் ராமகிருஷ்ணன் (ஹாட்லிக்கல்லூரி), இரண்டாமிடம் ஜோன்சன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), மூன்றாமிடம் பிரசாந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**சண்டைப் போட்டி பெண்கள்:**

15 வயதுப்பிரிவு

முதலாமிடம் துவாரகா (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), இரண்டாமிடம் பிரித்திகா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் சிந்துஜா (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை)

17 வயதுப்பிரிவு :

முதலாமிடம் மீரா (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம் சர்மிளா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் மாதுரிகா (கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)

19 வயதுப் பிரிவு:

முதலாமிடம் நிதுஜா (கனகபுரம் மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் கோகுலவாணி (முல்லைத்தீவு மகாவித்தியாலயம்), மூன்றாமிடம் சுரேஸ்கா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

**குழுக் காட்டா ஆண்கள்:**

15 வயதுப் பிரிவு

முதலாமிடம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, இரண்டாமிடம் சென். ஜோண்ஸ் கல்லூரி, மூன்றாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு :

முதலாமிடம் முல்லைத்தீவு மகாவித்தியாலயம், இரண்டாமிடம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, மூன்றாமிடம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

19 வயதுப்பிரிவு :

முதலாமிடம் சென். ஜோண்ஸ் கல்லூரி, இரண்டாமிடம் சென். ஜோண்ஸ் கல்லூரி, மூன்றாமிடம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**குழுக் காட்டா பெண்கள்:**

15 வயதுப்பிரிவு

முதலாமிடம் கைதடி நவீல்ட் பாடசாலை, இரண்டாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், மூன்றாமிடம் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி.

17 வயதுப்பிரிவு

முதலாமிடம் கைதடி நவீல்ட் பாடசாலை, இரண்டாமிடம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு

முதலாமிடம் முல்லைத்தீவு மகாவித்தியாலயம், இரண்டாமிடம் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி. (93)

இந்த "வெள்ளி பார்த்தல்" என்ற சொல்லை அடிக்கடி ஆசிரியர்களிடம்தான் நான் கேட்டிருக்கிறேன். சில சமயங்களில் வகுப்பில்

# வெள்ளி பார்த்தல்!

- கு. கிருத்திகன் -



ஆசிரியர் பாடம் நடத்தும் போது பாடத்தில் மனம் லயிக்காமல் வேறெங்காவது மனம் ஓடிவிடும். எப்படித்தான் கண்டுபிடிப்பார்களோ தெரியாது, சரியாகக் கண்டுபிடிப்பார்கள் ஆசிரியர்கள். ஏதாவது கேள்வியைக் கேட்க, நாங்கள் முழிக்க, "வகுப்பில பாடத்தைக் கவனிக்காமல் என்ன வெள்ளி பாத்தனியே" என்பது பல ஆசிரியர்கள் சர்வசாதாரணமாகப் பயன்டுத்தும் ஒரு கிட்டு வசனம்.

அதிலும் எங்களுக்கு கணிதம் படிப்பித்த ஆசிரியர் ஒருவர் "எத்தினை வெள்ளியெண்டு எண்ணியாச்சே" என்று கேட்டு நக்கல் செய்வார். அதாவது இந்த சந்தர்ப்பங்களில் "வெள்ளி பார்த்தல்" என்பது நிகழ்காலத்தில் நடப்பதை விடுத்து வேறேதாவதைப் பார்ப்பது என்கிற பொருளில் பயன்படுகிறது. கிட்டத்தட்ட இதே பொருளில் ஏமிலாந்துதல், வாய் பார்த்தல், பிராக்குப் பார்த்தல் (பராக்குப் பார்த்தல்) போன்ற சில சொற்களையும் பயன்படுத்துவார்கள். உதாரணத்துக்கு ஏதாவது ஒரு பாடத்தில் குறைந்த மதிப்பெண் பெற்ற பிள்ளை வீட்டில் அப்பா அல்லது அம்மாவிடம் "அது எங்களுக்கு படிப்பிக்கேல்லை" என்று காரணம் சொல்கிறது என்று வைத்துக் கொள்வோம். (அடிக்கடி நான் சொன்ன காரணங்களில் இது ஒன்று). அப்பா அல்லது அம்மாவிடமிருந்து இப்படியான பதில்களை எதிர்பார்க்கலாம்:

"உன்னை நம்பேலாது... நீ பாடம் படிப்பிக்கேக்கை எங்கையாவது வெள்ளி பாத்துக் கொண்டு இருந்திருப்பாய்"

அல்லது

"நீ எங்கையாலும் ஏமிலாந்திக்கொண்டு இருந்திட்டு ஏன் படிப்பிக்கேல்லை எண்டு பொய் சொல்லுறாய்"

அல்லது

"அவயள் படிப்பிச்சிருப்பினம். நீ வகுப்பில எங்கயாலும் வாய் பார்த்துக் கொண்டு இருந்திருப்பாய்"

அல்லது

"பாடம் நடக்கேக்கை எங்கையாலும் பராக்குப் பாத்துக்கொண்டு இருந்திட்டு, பொய்ச்சாட்டு சொல்லிறியோடா?"

மேற்படி சொற்களை வேறு வேறு சந்தர்ப்பங்களில் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசமான அர்த்தங்களில் பயன்படுத்துவார்கள். பகல் கனவு காணுதல் என்பது கூட "வெள்ளி பார்த்தல்" என்பதற்கு கிட்டத்தட்ட நெருக்கமான ஒரு சொல்லாடல்தான். வெள்ளி (நடசத்திரம்) பார்த்தல் என்பது அழகான பல நினைவுகளை மீட்டித்தரும் ஒரு அனுபவம். அதுவும் விஞ்ஞான பாடத்தில் இந்த நட்சத்திரக் கூட்டங்கள் பற்றிப் படித்த உடனே அந்த வயதில் இருக்கும் பிள்ளைகளுக்கு இது ஒரு இரவுப் பொழுது போக்காகிவிடும். அப்படி இரவில் பார்க்கவேண்டிய வெள்ளியை, பகலில் பார்க்கும், இல்லாத ஒன்றில் கவனத்தைச் சிதறவிடும் செய்கையைத்தான் வெள்ளி பார்த்தல் என்று சொல்லுவார்கள்.

# இப்படியும் ஒரு தொழில்!




நம்ப முடிகிறதா பாருங்கள். இந்தப் பெண்ணின் தொழில் பிரபலங்களுடன் நின்று போட்டோ எடுத்து விற்றல். ஊடகமும் வியாபாரமும் இப்படி எல்லாம் பின்னிப் பிணைந்து உழைப்பால் முன்னேறலாம் என்ற கருத்தை அடியோடு நாசம் செய்து பல மில்லியன் மக்களின் வாழ்வையே ஏளனம் செய்கின்றன: அமெரிக்காவில் பல துறைகளில் பிரபலர்களைத் தொடர்ந்து போய் அவர்களுடன் படமெடுத்துக் கொள்வதை இளம் வயதிலிருந்து செய்கிறாள் இந்த 17 வயதுப் பெண். இவளை ஒரு ஆதர்ச மனுஷியாகக் கருதி இவளோடு படம் எடுத்துக் கொள்ளப் போட்டி போடுகிறார்கள் இன்னும் பல அமெரிக்கச் சிறார்கள். இப்படிப் பிரபலர்களைப் படமெடுத்து விற்றுப் பணம் சம்பாதிப்பது ஒரு பெரும் தொழிலாக வருமானம் தருகிறதாம். சில படங்கள் 250,000 டொலர்களுக்குக் கூட விற்கின்றனவாம். அது அமெரிக்காவில் பெரும்பாலான மக்களுக்குப் பல வருடத்து வருமானம். பொருளை வழிபடத் துவங்கும் மனநோய் - commodity fetish - என்று ஒரு தாடிக்காரர் இதைச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வருணித்தது நினைவு வருகிறதா? இதை மன நோய் என்பதா, முதலீடு இல்லாத, அல்லது மிகக் குறைவாக உள்ள சாமர்த்தியமான வியாபாரம் என்பதா?

**இப்படி ஒரு சாமர்த்தியம் மனிதருக்குத் தேவையா?**

# பசித்தவன் விசுவாசத்தை நம்பலாமா

சிறுவர் கதை

கிணறு ஒன்றில் கங்காதத்தன் என்ற கிழத்தவளை வசித்து வந்தது. இந்தத் தவளையை அங்கிருந்த மற்றத் தவளைகள் அடிக்கடி தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தன.

மற்ற தவளைகள் கொடுத்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத கிழத்தவளை வாளி நீருடன் சேர்ந்து வெளியே வந்து மற்றத் தவளைகளை என்ன செய்யலாம்? என்று யோசித்துக் கொண்டிருந்த போது அந்தக் கிணற்றுக்கு அருகிலிருந்த பாம்புப் புற்று அதன் கண்ணில் பட்டது.

"நம்மைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும் தவளைகளை இந்தப் புற்றிலிருக்கும் பாம்பின் உதவியோடு கொன்று விட்டால் என்ன?" என்கிற எண்ணம் வந்தது.

மெதுவாகப் புற்றின் அருகில் சென்று பாம்பை நட்புக்கு அழைத்தது.


"என்னுடன் நட்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புவது ஏன்?" என்று கேட்டது அந்த பாம்பு.

"என்னுடன் இருக்கும் சில தவளைகள் என்னை தினந்தோறும் துன்புறுத்தி வருகின்றன. என்னால் பொறுக்க முடியவில்லை. அவற்றை அழிக்கத்தான் உன்னைத் தேடி வந்திருக்கிறேன். வேண்டாதவர்களை எதிரியைக் கொண்டே அழிக்கலாம் என்று நீதி நூலில் கூட சொல்லியிருக்கிறது" என்றது அந்த கிழத்தவளை.

"என்னால் எப்படி உன் இடத்திற்கு வரமுடியும்?"

"நான் வந்த வாளிக் கயிற்றின் வழியாக உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன்" என்றது தவளை.

பாம்பும் யோசித்தது.



நாமோ தினமும் உணவிற்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது இப்படி வலிய வந்து உணவிற்கு வழி செய்யும் தவளையின் கோரிக்கையை ஏன் மறுக்க வேண்டும்? என்று நினைத்தபடி தவளையுடன் அந்த கிணற்றுக்குள் சென்றது.

கிணற்றுக்குள் அந்த கிழத்தவளைக்குத் தொல்லை கொடுத்து வந்த தவளைகளை எல்லாம் தின்று அழித்தது பாம்பு. கிழத்தவளையும் மகிழ்ச்சியுற்றது.

ஆனால் அந்த மகிழ்ச்சி நெடுநாள் நீடிக்கவில்லை. பாம்பு கிழத் தவளையைப் பார்த்து, "உன்னுடைய எதிரிகள் எல்லாம் அழிந்து விட்டபடியால் என் பசிக்கு வேறு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்." என்றது

கிழத்தவளையோ, "நண்பரே நீங்கள் வந்த வேலை முடிந்து விட்டது. உங்கள் உதவிக்கு நன்றி. எனக்கு இனி உங்கள் உதவி தேவையில்லை." என்றது.

ஆனால் பாம்போ கோபத்துடன், "உன்னை நம்பித்தான் நான் இங்கு வந்தேன். தினந்தோறும் எனக்கு நீயே ஒரு தவளையை உணவாகக் கொடுக்க வேண்டும். இல்லையேல் உன் கூட்டத்தில் இருப்பவர்களை நான் என் விருப்பப்படி பிடித்துத் தின்று என் பசியைப் போக்கிக் கொள்வேன்." என்று அச்சுறுத்தியது.

கிழத்தவளையும் பயந்து போய் தினந்தோறும் ஒரு தவளையை பாம்புக்குக் கொடுத்து வந்தது. கடைசியில் ஒருநாள் அது கிழத்தவளையின் மகனையும் தின்று தீர்த்தது.

இதைக்கண்டு அதிர்ச்சியுற்ற கிழத்தவளையின் மனைவி, "நீங்கள் இந்தக் கொடியவனைக் கொண்டு வந்து நம் குழந்தையை மட்டுமில்லை, குலத்தையே அழித்து விட்டீர்கள். இனி நாமும் அழிந்து விடுவதற்கு முன்பு ஏதாவது சூழ்ச்சி செய்து அந்த பாம்பைக் கொன்று விடுங்கள் அல்லது நாமிருவரும் இங்கிருந்து தப்பித்துச்

# கிரிக்கெட்டும் கிளாமரும்

- ச.ந. கண்ணன் -

கிரிக்கெட் எங்கு நடந்தாலும் அங்கு கவர்ச்சியாக உடையணிந்து நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதற்குப் பல மந்திரா பேடிகள் தயாராக இருக்கிறார்கள். அதுவும் ஐ.பி.எல். போன்ற பகட்டான போட்டியில், கிளாமர் இல்லாமல் எதுவுமில்லை என்கிற நிலை உருவாகிவிட்டது. எங்கு சென்றுகொண்டிருக்கிறது கிரிக்கெட் சமூகம்?

2002இல் "வி" சனல் தொகுப்பாளரான ரூபி பாட்டியா, சோனி டிவியின் எக்ஸ்ட்ரா இன்னிங்ஸ் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். ஒரு மொடல், கவர்ச்சியான உடைகளில், கிரிக்கெட் நிபுணர்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்களைப் பேட்டியெடுக்கும் வே[illegible]யைச் செய்தபோது கிரிக்கெட் ஒளிபரப்பில் அது பெரிய மாற்றமாக இருந்தது. அடுத்த வருடம் 2003 உலகக்கோப்பையில் மந்திரா பேட்டி அடுத்த புரட்சியைத் தொடக்கினார். தினம் தினம் அவர் சேலை தான் உடுத்தி வந்தார். ஆனால் கண் கூசும் அளவுக்கு கிளாமர். கிரிக்கெட் என்பது அதிகமாகச் சிறுவர்கள் பார்க்கும் விளையாட்டு என்பதையெல்லாம் சோனி கண்டுகொள்ளவில்லை. அவர்களுடைய திட்டம் பலித்தது. மந்திரா பேடியின் கவர்ச்சி உடைகள் பரபரப்பாகப் பேசப்பட்டன. சினிமாவில் நடித்தும் புகழ்பெறாத மந்திரா பேடிக்கு, உலகக்கோப்பை பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

இந்த ஐ.பி.எல்.இல் சென்னையைச் சேர்ந்த ரோச்சல் மரியா ராவ் (மிஸ் இந்தியா 2012) மற்றும் பிக் பொஸ் புகழ் கரிஷ்மா கொடாக் ஆகிய இருவரும் புதிய தொகுப்பாளினிகள். சோனி சனலில், வருடா வருடம் இதுபோல புதிய மொடல்களைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். "கிரிக்கெட் ரசிகர்கள் ஒவ்வொரு ஐ.பி.எல்.இலும் கிளாமரான தொகுப்பாளினிகளைப் பார்த்துப் பழகிவிட்டார்கள். ஒவ்வொரு வருடமும்



புதிய முகங்களை அறிமுகப்படுத்துவதன் காரணம், வெகுஜன ரசனைக்காகவும் புதுமைக்காகவும்தான். இவர்கள் கிரிக்கெட் அறிவுக்காகத் தேர்வு செய்யப்படுவதில்லை" என்று வெளிப்படையாகச் சொல்கிறார், சோனி டிவியின் தலைமை நிர்வாகி நீரஜ் வியாஸ்.

மைதானத்துக்குள்ளேயும் கிளாமர் பெண்கள், சியர் லீடர்ஸ் என்கிற புதிய பெயரில். ஒவ்வொரு அணியும் சிக்ஸர், ∴.போர் அடிக்கும்போதும் விக்கெட் விழுகிறபோதும் சியர் லீடர்ஸ் டான்ஸ் ஆடி ரசிகர்களை மகிழ்விக்கவேண்டும். பெல்ஜியம், நோர்வே, உக்ரைன், ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து இவர்கள் வரவழைக்கப்படுகிறார்கள். பெரும்பாலும் 19 வயதிலிருந்து 23 வயது பெண்கள்.

2012 20-20 உலகக்கோப்பை இலங்கையில் நடந்தபோது, சியர் லீடர்ஸாக இலங்கைப் பெண்கள் பங்கேற்றார்கள். ஐ.பி.எல். அளவுக்கு கிளாமர் இல்லை என்று விமரிசனங்கள் எழுந்தன. அதற்கு, சியர் லீடர்ஸின் பொறுப்பாளரான சுதேவ் அபய்சுகேரா, "இதுபோன்ற போட்டிகளுக்கு அழகான பெண்கள்தான் தேவை. ஆனால், அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டும். இந்தப் போட்டிக்கு வந்த பெண்கள், பெற்றோர்கள் கவனிப்பார்கள் என்பதால் குட்டைப் பாவாடையை அணியவில்லை" என்றெல்லாம் பேசினார்.

கிளாமர் தொகுப்பாளர்கள், சியர் லீடர்ஸ் வரிசையில் இன்னொன்றும் சேர்ந்துவிட்டது. மொடல்கள்! ஒரே நாளில் புகழ்பெற வேண்டுமா? கிரிக்கெட் போன்ற ஏதாவதொரு விளையாட்டை முன்வைத்து அதிரடி அறிக்கை விடவேண்டும். ஒரேநாளில் அகில உலகப் புகழ். 2011 உலகக் கோப்பை கிரிக்கெட் சமயத்தில், இந்தியா கோப்பையை வென்றால் நிர்வாணமாக மைதானத்தில் ஓடுவேன் என்று சொல்லியே பட்டிதொட்டியெல்லாம் பிரபலமானார் பூனம் பாண்டே. விளைவு, இன்று முன்னணி மொடலாகிவிட்டார். ஹொக்கிக்கும் இப்படியொருவர் கிளம்பினார். இந்திய ஹொக்கி வீரர்கள், சம்பளத்துக்காகப் போராடியபோது, தன் நிர்வாணப் ப[illegible]ங்களை ஏலத்தில் விற்று ஹொக்கி வீரர்களுக்கு [illegible]தவுவதாகக் கிளம்பினார், டிஜே ஜென்னி என்கிற ஒரு மொடல். "நான் பூனம் பாண்டே போல பொய்யர் கிடையாது. சொன்னதைச் செய்து தருவேன்" என்றெல்லாம் சபதமளித்தார். கிரிக்கெட், ஹொக்கிக்கு இதைவிட வேறு என்ன கேடு நடக்கமுடியும்?

பொழுதுபோக்கு என்றால் அங்கு கிளாமரும் அவசியம் என்பது எழுதாதச் சட்டமாகிவிட்டது. கிரிக்கெட் தருகிற பரவசத்தையும் தாண்டிய ஓர் ஈர்ப்பைப் பார்வையாளர்களுக்குத் தர கிரிக்கெட் சபைகளும் டிவி கம்பெனிகளும் முடிவெடுத்துவிட்டன.

ஒன்று நிச்சயம். ரிச்சி பேனாட், ரோனி கிரேக் போன்ற கிரிக்கெட் நிபுணர்கள் மட்டுமே இடம்பெற்றிருந்த கிரிக்கெட் ஒளிபரப்பின் பொற்காலம். முடிவடைந்துவிட்டது.

---

சென்று விடுவோம்." என்றது.

அந்த சமயத்தில் அங்கு வந்த பாம்பு தனக்குப் பசியாக இருப்பதால் "ஏதாவது கொடு" என்று கேட்டது.

உடனே கிழ்த்தவளையும், "நண்பரே நாங்கள் இருக்கும் வரை நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் இப்போதே என் மனைவியை அனுப்பி வேறு கிணற்றிலிருந்து தவளைகளை இங்கே அழைத்து வரச் சொல்கிறேன்." என்று மனைவியை அங்கிருந்து போகச் செய்தது.

சில நிமிடங்கள் கழிந்த பின்பு, "நீ எவ்வளவு நேரம்தான் பசியைப் பொறுத்துக் கொண்டிருப்பாய்? நானே வேகமாய்ப் போய்த் தவளைகளை அழைத்து வருகிறேன்" என்றபடி கயிற்றின் வழியே அக்கிணற்றை விட்டு வெளியேறியது.

தன் பசிக்கு உணவு கொண்டு வரச் சென்ற கிழட்டுத்தவளையும் அதனுடைய மனைவியும் ஒரு நாளாகியும் வராமலிருக்கவே பாம்பு ஏமாற்றமடைந்தது.

கிணற்றுச் சுவற்றிலிருந்த ஒரு பல்லியைப் பார்த்த அந்தப் பாம்பு, "பல்லியாரே, அந்தக் கிழட்டுத் தவளைக்கு நீயும் நண்பன்தானே, நீ அந்தத் தவளையிடம் சென்று, நான் அந்தத் தவளைக்குத் துரோகம் செய்யமாட்டேன் என்று உறுதியளித்ததாகச் சொல்லி பயப்படாமல் வரச் சொல்" என்று தகவல் சொல்லி அனுப்பியது. பல்லியும் அந்தக் கிழட்டுத்தவளையைத் தேடிச் சென்று பாம்பு சொன்ன செய்தியைச் சொல்லியது.

அதற்கு அந்தக் கிழட்டுத்தவளை "பசித்தவன் விசுவாசம் நம்ப முடியாதது. அந்தக் கொடியவனிடம் நட்பு வைத்து என் குடும்பத்தினர் அனைவரையும் இழந்து விட்டேன். நான் இனி அங்கு வர மாட்டேன்." என்று சொல்லி அனுப்பியது.

இப்படித்தான் நாம் நம்முடைய சொல்லுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தீயவர்களோடு நட்பு கொண்டால் அந்தத் தீயவர்கள் நம்மையும் சேர்த்து அழித்து விடுவார்கள். நட்பு கூட நல்லவர்களோடுதான் இருக்க வேண்டும். இல்லையேல் இழப்பு நமக்குத்தான்.

---

# எல்.இ.டி விளக்குகளால் கண் பார்வை பறிபோகும்?



எல்.இ.டி விளக்குகளால் மனிதர்களின் கண் பார்வைக்கு பாதிப்பு ஏற்படலாம்" என்று ஸ்பெயின் நாட்டு ஆராய்ச்சியாளர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விலை குறைவான குண்டு மின்குமிழ்களைத்தான் மக்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்தி வந்தனர். ஆனால், இவை வெப்பத்தை அதிகளவில் உமிழ்வதாகவும், மின்சாரத்தை அதிகளவில் உறிஞ்சுவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு மாற்றாக எல்.இ.டி எனப்படும், "லைட் எமிட்டிங் டையோட்" விளக்குகள் அறிமுகம் ஆனது. இவை குண்டு குமிழ்கள் பயன்படுத்தும் மின்சாரத்தில் 5இல் ஒரு பகுதியை மட்டுமே பயன்படுத்துவதாகவும், சுற்றுச்சூழலுக்கு மிக சிறப்பானது என்றும் கூறப்பட்டது. இதனால், ஐரோப்பிய யூனியனில் பல ஆண்டுகளுக்கு முன்பே குண்டு மின்குமிழ்களுக்கு தடை விதிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில், செல்போன்கள், டிவி என்று பல்வேறு மின்னணு சாதனங்களில் எல்.இ.டி பயன்பாடு அதிகரித்துவிட்டது. தற்போது மக்களிடம் எல்.இ.டி மின்குமிழ்கள் பற்றி, மின்சாதன நிறுவனங்கள் தீவிர பிரசாரம் செய்து வருகின்றன. ஆனால், எல்.இ.டி குமிழ்களால் மனிதர்களின் கண் பார்வைக்கு பாதிப்பு ஏற்படும் என்று ஸ்பெயின் நாட்டு ஆராய்ச்சியாளர் தற்போது அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளனர். கம்ப்லூடென்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் செலியா சான்செஜ் ரமோஸ் என்பவர் தலைமையில் ஒரு குழு, எல்.இ.டி குமிழ்கள் குறித்து ஆராய்ச்சி நடத்தி முடிவை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் கூறியிருப்பதாவது: எல்.இ.டி குமிழ்கள் சுற்றுச்சூழலுக்கு சிறப்பானது என்றாலும், அதில் இருந்து நீல மற்றும் ஊதா (வயலட்) கதிர்கள் வெளியாகின்றன. இவை சிறிய அலைவீச்சை கொண்ட சக்திவாய்ந்த கதிர்கள். இவை அதிக சக்திவாய்ந்தவை என்றாலும், குளுமையாக இருப்பதால் சாதாரணமாக அதைப் பார்த்து கொண்டிருக்க முடியும். ஆனால் இப்படி அந்த வெளிச்சத்தைப் பார்க்கும்போது, அது கண்ணின் விழித்திரையை பாதிக்கும். எல்.இ.டி விளக்குகள் உமிழும் வெளிச்சம் குளுமையாக இருப்பது போல் தோன்றினாலும், அதனால் கண் பார்வைக்கு ஆபத்து அதிகம். இவ்வாறு கூறியுள்ளனர்.

---

# நகரங்கள்

- உலகின் மிகப் பழமையான தலைநகரம் டமாஸ்கஸ். சிரியா நாட்டின் தலைநகரமாக 4,500 ஆண்டுகளாக இருந்து வருகின்றது.
- மக்கள் தொகை அதிகம் உள்ள நகரங்களில் முதன்மையானது டோக்கியோ. அடுத்தது மெக்ஸிகோ நகரம்.
- பரப்பளவில் மிகப் பெரிய நகரம் குயீன்ஸ்லாந்திலுள்ள மவுண்ட் இஸா. இதன் பரப்பளவு 41,978 சதுர கி.மீ.
- 3,684 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள தலைநகரம் லாசா. திபெத்தின் தலைநகரம் இது.
- கடல் மட்டத்திலிருந்து 16,732 அடி உயரத்தில் அமைந்துள்ள நகரம் வென்சுவான். 1955ஆம் ஆண்டு திபெத்தில் இந்நகரம் உருவாக்கப்பட்டது.
- உலகில் செலவு அதிகமாகும் நகரம் டோக்கியோ.
- சைக்கிள்கள் அதிகம் உள்ள நகரம் - பெய்ஜிங் (சீனா).
- டாக்ஸிகள் அதிகம் உள்ள நகரம் மெக்ஸிகோ.
- கார்கள் அதிகம் உள்ள நகரம் நியூயோர்க் (அமெரிக்கா).



பாடசாலை வைரவிழாவில் மாணவர் கலை நிகழ்ச்சியும், விருந்தினர் அழைத்து வருதலும்

# கிளி /ஞானிமடம் அ.த.க. பாடசாலை பூநகரி



அதிபர் திருமதி தவமலர் கனகசபை

பூநகரி பிரதேச செயலர் பிரிவு 19 கிராம சேவை அலுவலர் பிரிவுகளைக் கொண்ட ஒரு பாரிய பிரதேசமாகும் 449 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். இப்பகுதியானது. 1990ஆம் ஆண்டில் இருந்து நான்கு இடப்பெயர்வுகளைச் சந்தித்து இறுதியாக 2009 ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் திகதிக்குப் பின் மீள் குடியேற்றம் ஆரம்பமாகியது. ஞானிமடம் கிராம சேவையாளர் பிரிவில் ஞானிமடம் அ.த.க. பாடசாலை அமைந்துள்ளது. பூநகரி கோட்டை அமைந்துள்ள வாடியடி நகர்ப்பகுதியில் உள்ள நாற்சந்தியில் இருந்து வடக்கே செல்லும் வீதி ஞானிமடம் நாகதேவன் துறை வீதி, இவ் வீதியில் இரண்டு கி.மீ தூரத்தில் ஞானிமடம் அ.த.க. பாடசாலை அமைந்துள்ளது. வாடியடியில் இருந்து கிழக்கே பரந்தன் வீதியும் தெற்கே மன்னார் வீதியும் மேற்கே சங்குப்பிட்டி ஊடான யாழ்ப்பாணம் வீதியும் அமைந்துள்ளது.

ஞானிமடத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை 60 ஆண்டு வரலாற்றைக் கொண்டது. , இக்கிராமத்தில் ஓர் பாடசாலையை உருவாக்க வேண்டுமென்ற உன்னத நோக்கோடு அவ்வூரைச் சேர்ந்த பெரியார் சின்னப்பு இரா முப்பிள்ளை என்பவர் தமது சொந்தக் காணியில் ஒரு பகுதியை பாடசாலைக்கென நன்கொடையாகக் கொடுத்து உதவியதோடு 1949 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அங்கு மண்ணினால் சுவா வைத்து ஓலையால் வேய்ந்த ஓர் சிறிய மண்டபத்தை அமைத்துக் கொடுத்து இப்பாடசாலையை ஆரம்பித்துவைத்தார். அங்கு சித்தன் குறிச்சி, ஞானி மடம், செட்டியகுறிச்சி பிள்ளைகளுக்கு கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெற்றுவந்த நிலையில் 1951 ஆம் ஆண்டு இப்பாடசாலையை இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதோடு அன்று தொட்டு அரச பாடசாலையாக இயங்கத் தொடங்கியது.



பாடசாலை அதிபருடன் ஆசிரியர்கள்

இக்கிராமத்தில் முன்னதாக பல ஞானிகள் ஒன்று கூடி மடம், கேணி அமைத்து வாழ்ந்தார்கள் எனவும் அதன் காரணமாக ஞானிமடம் எனப் பெயர் வந்ததாகவும் அருகே இருக்கும் சித்தன்குறிச்சி என அழைக்கப்படும் கிராமத்தில் பல வகையான அற்புதங்கள் செய்யும் சித்தர்கள் வாழ்ந்ததால் சித்தர் குறிச்சி எனப்பெயர் வழங்கி இன்று அப்பெயர் மருவிய நிலையில் சித்தங்குறிச்சி என அழைக்கப்படுவதாகவும் அறிய முடிகிறது.

இக் கிராமத்திற்கு அருகே இருக்கும் நாகதேவன் துறை வரலாற்றுச் சிறப்புமிக்கதாக இருக்கிறது. போர்த்துக்கீச படைகள் இத்துறையூடாக பிரயாணங்களை மேற்கொண்டதாகவும் வரலாறு கூறுகிறது. பிற்காலத்தில் நாகதேவன் துறையில் இருந்து கச்சாய் துறைக்கும், கொழும்புத்துறைக்கும் வத்தைகள், தோணிகள்மூலம் பிரயாணம் மேற்கொள்ளப்பட்டதாக அறிய முடிகிறது.

பூநகரிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வாரமொரு தடவை தபால் பொதி இந்தப் பாதையால் கொண்டு வரப்பட்டே விநியோகம் இடம்பெற்றுள்ளது.


சிறப்புடன் இயங்கிய இப்பாடசாலை போர்க்கால நடவடிக்கையால் 1991 ஆம் ஆண்டு இடம்பெயரும் நிலை ஏற்பட்டு செக்காலை மன்னார் வீதி 4ஆம் கட்டையில் இயங்கி மீளவும்தனது சொந்த இடத்தில் தற்காலிக கொட்டில்களில் இயங்க ஆரம்பித்தது. இடம் பெயர்ந்த இக்கிராம மக்களும் மீள் குடியேற்றம் மூலம் வந்து சேர்ந்தவண்ணம் உள்ளார்கள்.

மீள இடம் பெயர்ந்து இயங்கத் தொடங்கிய இப்பாடசாலையின் முன்னைய கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்த நிலையில் புலம்பெயர்ந்த இப்பாடசாலையின் உறவுகள் பழைய மாணவர்கள் பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணியில் தாராளமனதோடு உதவிவருவதை அறிய முடிகின்றது.

இப்பாடசாலையில் 150 வரையான மாணவூர்களும் 12 ஆசிரியர்களும் கொண்ட தரம் 11 வரை குறைந்தளவு மாணவர்களைக் கொண்ட வகுப்புக்கள் இருந்த போதும் கோட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் பல போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி சாதனை படைக்கும் பாடசாலையாக மாறிவருவது கண்கூடு.

சென்ற ஆண்டில் இப்பாடசாலை (60 ஆண்டு) புலம் பெயர் உறவுகளின் முழுமையான ஆதரவோடு வைரவிழாவை சிறப்பாகக் கொண்டாடியதோடு வைரவிழா மலரையும் வெளியிட்டு சாதனை படைத்தமை எல்லோராலும் பாராட்டப்பட்ட நிகழ்வாக அமைந்தது. அத்துடன் வருடாந்த பரிசளிப்பு விழா, வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியையும் நடாத்தியுள்ளது.

இப்பாடசாலையில் தமிழ் இன்னியக்குழு ஆரம்பிக்கப்பட்டு பல பொது நிகழ்வுகளிலும் ஏனைய பாடசாலை நிகழ்வுகளிலும் அவர்களது இன்னியக்குழு



பாடசாலை கட்டட நிர்மாணப்பணியில்

## வாரம் ஒரு பாடசாலை

செயற்பாடு இடம் பெற்றுவருவது சிறப்பம்சமாகும்.

இப்பாடசாலையின் புனர் நிர்மாணப்பணிக்காக 42 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு யுனிசெவ் நிறுவன பங்களிப்போடு இரண்டு மாடிக்கட்டடங்கள், நூலகம், கணனிக்கூடம் ஆசிரியர்விடுதி, நீர்த்தாங்கி என்பன துரிதகதியில் அமைகப்பட்டுவருவதும் இக் கட்டடங்கள் மூன்றாம் தவணையில் நிறைவு செயயப்பட்டு தமது பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

- தேசிய மட்டச் சாதனை
- கட்டட நிர்மாண விரிவாக்கம்
- இணைபாட செயலூக்கம்
- சிறந்த கல்வி வெளியீடு

இப்பாடசாலையில் கணித மன்றம், விஞ்ஞான மன்றம், இந்துமன்றம், மாணவர் மன்றம் சமூகக் கல்வி மன்றம், அழகியல் மன்றம் பழைய மாணவர் சங்கம் என்பன சிறப்புற இயங்கி வருவதாகத் தெரிகிறது.

### சாதனை மாணவி

சமூக விஞ்ஞான அறிவுப்போட்டியில் தரம் 7ஐ சேர்ந்த மாணவி சதீஸ்கரன் சயந்தா கோட்ட மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முதல் இடத்தைப் பெற்றதோடு தேசிய மட்டத்திலும் 3ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைததுள்ளார்.



செல்லி.சயந்தா சதீஸ்கரன்

இப்பாடசாலை அதிபர் சென்ற ஆண்டில் சிறந்த ஆசிரியருக்குரிய பிரதீப பிரபா ஜனாதிபதி விருதை மாண்புமிகு ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

சிறந்த ஆளுமைப் பண்புகள் கொண்ட இப் பாடசாலை அதிபர் திருமதி தவமலர் கனகசபையோடு இப் பாடசாலையில் கடமைபுரியும் ஆசிரியர்கள் இணைந்து செயற்படுவதன்மூலம் இப்பாடசாலை சாதனை படைக்கும் பாடசாலையாக மாற்றம் பெறவாய்ப்புக்கள் கிடைக்கும். வெகு விரைவில் சகல வசதிகளும் கொண்ட ஒரு பாடசாலையாக மாற்றம் பெறுவதோடு இடம்பெயர்ந்த சகல குடும்பத்தினரும் இப்பகுதியை நோக்கிவரும் நிலையில் கூடிய மாணவர் தொகை கொண்டதாக மாற்றம் பெற்று உயர்வடைய வாழ்த்துகிறோம்.

தொகுப்பு
பொன். தில்லைநாதன்

# வவுனியா தமிழ்ச் சங்கத்தின் பட்டினத்தார் விழா

(யாழ். நிருபர்)

வவுனியாத் தமிழ்ச்சங்கம் நடாத்தும் பட்டினத்தார் விழா, நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை, வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழ்மாமணி, தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மங்கல விளக்கினை த.தயானந்தகுமார், திருமகள் தம்பதியர் ஏற்றி வைப்பர். தொடக்கவுரையினை யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தின் தலைவரும், யாழ். தமிழ்ச் சங்கத்தின் உப செயலாளருமாகிய லோகேஸ்வரன் துஷிகரன் நிகழ்த்துவார். தலைமையுரையினைத் தொடர்ந்து "பட்டினத்தார் வாழ்வில்" என்ற பொருளில் இடம்பெறும் மாணவர் அரங்கத்தில் "மருதவாணன்" என வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவன் கணேசலிங்கவேல் கனகேந்திரனும், "தாயார்" என வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலய மாணவி தயாபரன் டயாளினியும், "பத்திரகிரியார்" என வவுனியா இந்துக் கல்லூரி மாணவன் சிவாகரன் மிதுர்சனும், "திருவொற்றியூர்" என வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி மாணவி புவிதா பத்மநாதனும் உரையாற்றுவார்கள். இதற்கு நடுவராக, ஓய்வு பெற்ற அதிபர் சின்னையா வையாபுரிநாதன் கடமையாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறும், பட்டினத்தார் பாடல்களை மட்டுமே கொண்டமைந்த இசையரங்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறை விரிவுரையாளர், இசைக்குரிசில் ந.பரந்தாமன் பாடுகிறார். விசேட நிகழ்ச்சியாக இடம்பெறும் கருத்தரங்கத்தில் "பட்டினத்தாரும் வள்ளுவரும்" என்ற பொருளில் தமிழ்மணி கே.கே. அருந்தவராஜாவும் "பட்டினத்தாரும் தேவாரமுதலிகளும்" என புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபனும், "பட்டினத்தாரும் பாரதியாரும்" என்ற பொருளில் ஓய்வு பெற்ற அதிபர் ச.க.தியாகலிங்கமும், "பட்டினத்தாரும் கண்ணதாசனும்" என வவுனியா புதுக்குள தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் ல.சதீஷ்குமாரும் கருத்துரை வழங்கவுள்ளார்கள். இவ்விழா, நிலையாமை பேசி நிலைத்து நின்ற சாமியாகிய பட்டினத்துச் சித்தருக்கு இலங்கையில் நடைபெறும் முதல் விழாவாகுமென தமிழ்ச்சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் குறிப்பிட்டார். (10)

# சுற்றாடல்தினப் போட்டி. மாணவிக்கு தங்கப்பதக்கம்

(வலிகாமம்)

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களிடையே கல்வியமைச்சு நடத்தியிருந்த செயற்றிட்ட"ப் போட்டியில், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவி தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

இராமநாதன் கல்லூரியில் தரம் 13 இல் கல்வி கற்கும் செல்வி. கீதாஞ்சலி பொன்னானந்தன் என்ற மாணவியே தங்கப்பதக்கம் பெற்றவர் ஆவார்.

இப்போட்டி இலங்கையிலுள்ள பாடசாலைகளில் இயங்கிவரும் "சுற்றாடல் முன்னோடிப் படையணி மாணவர்களிற்கிடையே 2013ஆம் ஆண்டு நடைபெற்றிருந்தது.

சுற்றாடல் முன்னோடிகளிற்கான உயர்விருதாக ஜனாதிபதியினால் தங்கப்பதக்கம் வழங்கி இம் மாணவி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இக் கௌரவத்தினை ஏற்றுக் கொள்வதற்காக இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியர்களும், 50 மாணவிகளும், ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றிருந்தனர்.

இப்போட்டியில் பங்குபற்றித் தங்கப்பதக்கம் பெற்ற முதல் தமிழ் மாணவி என்ற பெருமையினை இம் மாணவி பெற்றுள்ளார். (06)

# மதுபானசாலையை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி பொதுச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையால் அப்பிரதேச மக்கள் சொல்லொணாத் துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

நெல்லியடி நகரப்பகுதியில் 6 மாதங்களுக்கு முன்னர் கொடிகாம வீதியில் இருந்த மதுபான நிலையம் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தமையால் மூடப்பட்டது. இதன் பின்னர் தற்போது மக்கள் அதிகம் நடமாடும் குறித்த பகுதியில் மதுபானசாலை அமைந்துள்ளமை. பெரும் இடையூறாக இருப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இம்மதுபானசாலை பிரதேச சபையின் அனுமதியுடனா திறக்கப்பட்டுள்ளது என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நெல்லியடி சந்தைப்பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையை மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்திற்கு மாற்றுமாறும் இப்பிரதேச பொதுமக்கள் உரியவர்களை கேட்டுக்கொள்கின்றனர். (18)

## வெள்ளி நற்சிந்தனை...



# அறவாழ்வு அவசியம்

தர்மத்திற்கு இலக்கணம் வகுத்துச் சொல்வது கடினம் "தெய்வீகச் சட்டம" என்று அதைச் சொல்லலாம் "நல்ல மார்க்கம்" என்றும் கூறலாம் "அறநெறி" எனவும் குறிப்பிடலாம் "ஒழுக்க மார்க்கம" என்று சொல்லலாம் எல்லாவற்றுக்கும் மேலாக உலகைப் பரிபாலிக்கும் இறைவனின் இயற்கையின் பேராற்றல் என்றும் குறிப்பிடலாம்.

ஒவ்வொருவரும் தர்ம மார்க்கத்தில் நின்று ஒழுக வேண்டும். தர்மத்தைப் போற்றி அதர்மத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்று எல்லா சாஸ்திரங்களும் எடுத்துச் சொல்லுகின்றன. ஆனால் நடைமுறை வாழ்க்கையில் தர்ம வழியைக் கடைப் பிடிக்கும் போது நிறையகஷடங்களும் சோதனைகளும் ஏற்படவே செய்யும் தர்ம மார்க்கத்தில் ஆரம்பத்தில் தொல்லைகள் இருந்தாலும் முடிவில் தர்மம், அதர்மத்தை வெற்றி கொள்ளவே செய்யும்.

அப்பழக் கஷ்டங்கள் ஏற்படும் போது விரக்தி அடைந்து இறைவனுக்கு சாபம் கொடுக்கத் தொடங்கி விடக் கூடாது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் அனுபவிக்காத தொல்லையா? படாத கஷ்டமா? இருந்தும் பகவானின் உதவி தங்கள் பக்கம் இருக்கிறது என்கின்ற நம்பிக்கையை அவர்கள் இழக்கவே இல்லை. எதைஇழந்தாலும் எதற்காகவும் தர்ம வழியை இழக்கக் கூடாது.

அறிஞர்கள் மகாபாரதப் போர் – குருஷேத்திரப் போர் பற்றிக் குறிப்பிடுகையில் அதனை தர்ம யுத்தம் என்று கூறுகின்றார்கள். தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையில், நனமைக்கும் தீமைக்கும் இடையில், நல்ல சிந்தனைக்கும் தீய சிந்தனைக்கும் இடையில் அறத்திற்கும் மறத்திற்கும் இடையில், நடைபெற்றது பாரதப் போர். இறுதியில் தர்மம், நன்மை, நல்ல சிந்தனை, அறம் வெற்றிபெற்றது.

தர்மம் என்பதை குறுகிய எல்லைக்குட்படுத்தாமல் அதன் பரந்து விரிந்த கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏழைக்கு உதவுதல் என்பது தர்மத்தில் ஒன்று அவ்வளவு தான். தர்மத்தின் கிளைகள் பற்பல. சுருங்கக் கூறின் பிறருக்குத் தீமை ஏற்படுத்தாத அனைத்தும் தர்ம மார்க்கமே!

மனத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே உண்மையான அறம் ஆகும். மன மாசோடு செய்யப்படும் அறச்செயல்கள் யாவும் வெறும் ஆரவாரச் செயல்களே அன்றி உண்மையான அறச்செயல்கள்ஆகா. பொறாமை , பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகியவை மனதை மாசடையச் செய்யும். அவற்றை நீக்கி வாழ முயல்வதே தர்ம வழி வாழ்க்கையாகும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**






கன்னி:

**உத்திரம் 2,3,4 – ஆம் பாதம்,**
**அத்தம்,**
**சித்திரை 1,2 – ஆம் பாதம்**

சிறந்த சிந்தனைவாதி நீங்கள். குரு பகவான் 28.5.13 முதல் 12.6.14 வரை உங்களின் 10 – ஆம் வீட்டில் அமர்கிறார். உத்தியோகம், பதவி, கௌரவத்துக்கு பங்கம் வருமே என்று கலங்கவேண்டாம். ஓரளவு நன்மையே உண்டாகும். வி.ஐ.பி – கள் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டில் வேலை அமையும். சில தருணங்களில், வேலைகளை முடிக்க முடியாமல் மன இறுக்கத்துக்கு ஆளாவீர்கள். குரு உங்கள் ராசிக்கு 2 – ஆம் வீட்டைப் பார்ப்பதால், சாதுரியமான பேச்சால் காரியம் சாதிப்பீர்கள். மழலை பாக்கியம் கிடைக்கும். கடனாகக் கொடுத்து ஏமாந்த பணம் வசூலாகும்.

குரு 7 – ஆம் பார்வையால் சுக வீட்டைப் பார்ப்பதால் தாயாருடனான மோதல்கள் விலகும். அவரது உடல்நலன் சீராகும். வீடு – வாகனம் வாங்குவதற்கு வங்கிக் கடன் கிடைக்கும். குரு 9 – ஆம் பார்வையால் 6 – ஆம் வீட்டைப் பார்ப்பதால், வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பழைய கடன் பிரச்சினைகளில் ஒன்று தீரும். குடும்பச் சொத்து கைக்கு வரும். அரசால் ஆதாயம் அடைவீர்கள். மகனுக்கு, நல்ல பெண் அமைவாள்.

**குருபகவானின் சஞ்சாரம்:** 28.5.13 முதல் 25.6.13 வரை உங்கள் திருதியாதி பதியும் – அஷ்டமாதிபதியுமான செவ்வாயின் மிருகசீரிட நட்சத்திரத்தில் குரு செல்வதால் முன்கோபம், திடீர் செலவு, சொத்துப் பிரச்சினை, சகோதர வகையில் வருத்தம் வந்து செல்லும். எவரையும் எவரிடமும் சிபாரிசு செய்ய வேண்டாம். வாகனத்தை இயக்கும் போது கவனம் தேவை. இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

26.6.13 முதல் 28.8.13 வரை; 27.1.14 முதல் 12.4.14 வரை ராகுவின் திருவாதிரை நட்சத்திரத்தில் குரு செல்வதால், தெளிவாக முடிவெடுக்க முடியாமல் குழம்புவீர்கள். பூர்வீகச் சொத்தை விற்க நேரிடும். கர்ப்பிணிகள் பயணங்களைத் தவிர்க்கவும்.

29.8.13 முதல் 26.1.14 வரை; 13.4.14 முதல் 12.6.14 வரை உங்களின் சுக – சப்தமாதிபதியான குரு, தனது நட்சத்திரமான புனர்பூசத்தில் செல்கிறார். தம்பதிக்கு இடையே மனஸ்தாபம் வந்துபோகும். தாயாருடன் மனத்தாங்கல் வரும். அவருக்கு மருத்துவச் செலவுகள் வந்துபோகும்.

குரு பகவான் 13.11.13 முதல் 26.1.14 வரை புனர்பூச நட்சத்திரத்திலும், 27.1.14 முதல் 11.3.14 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ரகதியில் செல்கிறார். பண வர்வு, சொத்துச் சேர்க்கை உண்டு. சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பங்கு மூலம் பணம் வரும். புது வேலை கிடைக்கும். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

வியாபாரத்தில் பெரிய முதலீடுகளோ, பெரிய அளவில் எவருக்கும் கடன் தரவோ வேண்டாம். அனுபவமிக்க வேலையாட்கள் திடீரென பணியை விட்டு விலகுவர். புதியவர்களை நம்பி புதிய தொழிலில் இறங்க வேண்டாம். பங்குதாரர்கள் ஏடாகூடமாகப் பேசுவர். ஏற்றுமதி, இறக்குமதி, எரிபொருள், இரசாயன வகைகளால் லாபம் உண்டு.

உத்தியோகத்தில், உங்கள் உழைப்பைப் பயன்படுத்தி வேறு சிலர் முன்னேறுவர். உங்களைவிட அனுபவம் குறைவானவர்கள், வயதில் சிறியவர்களிடம் எல்லாம் நீங்கள் அடங்கிப்போக வேண்டிய சூழல் உருவாகும். மேலதிகாரிகளுடன் பணிந்து போங்கள். எதிர்பார்த்த இடமாற்றம், சம்பளம் சற்று தாமதமாகக் கிடைக்கும்.

கன்னிப்பெண்களுக்கு எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் இடம் கிடைக்கும். தடைப்பட்ட திருமணம் கூடிவரும். பெற்றோரைப் பகைக்க வேண்டாம். வெளி நாட்டில் வேலை, மேற்கல்வி அமையும்.

மாணவர்களுக்கு, கணிதம் அறிவியல் பாடங்களில் அதீத கவனம் தேவை. அரசியல்வாதிகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகும். கட்சி மேலிடம் உங்களை உற்றுக் கவனிக்கும். கலைத் துறையினர், யதார்த்தப் படைப்புகளால் புகழ் பெறலாம்.

மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி, பணத்தின் அருமையையும் பொறுமையின் அவசியத்தையும் உங்களுக்கு உணர்த்துவதாக அமையும்.

பரிகாரம்: இல்லாதோருக்கு உதவுங்கள். முயற்சிகள் பலிதமாகும்.

(தொடரும்...)

# குறைந்தபட்ச தகுதியுடையோருக்கு வடக்கு, கிழக்கில் ஆசிரிய நியமனம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆசிரியர் வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்காக குறைந்தபட்ச தகுதியை கொண்டோர் உள்வாங்கப்படுவார்கள் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அத்துடன், வடக்கு கிழக்கு மாகாணங்களில் 30 வருடங்களாக யுத்தம் இடம்பெற்றது. இதனால் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை கொண்டோரை இனங்காணுவது இலகுவான விடயமல்ல. இதுவொரு யதார்த்தமான உண்மை. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுள்ளோர் இல்லாவிட்டாலும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதனிலும் பார்க்கக் குறைந்த கல்வித் தகைமை உள்ளோரை நியமிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு நான் தீர்மானித்துள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இவர்கள் ஆசிரியர்களாக அல்லாமல் ஆசிரியர் உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும், இது தொடர்பான தகவல்களை அனுப்புமாறு நாங்கள் ஆளுநருக்கு கோரிக்கை விடுத்துள்ளோம் எனவும், எதிர்காலத்தில் எப்படியாவது ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை க.பொ.த. சாதாரண தரத்தில் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் கணிதபாடத்தில் சித்தியடையத் தவறுவராயின் அவர் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதே பொருளாகுமெனவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் 65 வீதமானவர்கள் சித்தியடைந்தமையை மாபெரும் வெற்றியாகக் கருதினாலும், பதினொராயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையவில்லை என்ற அதிர்ச்சித் தகவலும் உண்டு. அதேபோன்று ஒரு இலட்சத்து 68 ஆயிரம் பேர் கணித பாடத்தில் சித்தியடையவில்லை. சாதாரணதரத்தில் ஒருவர் சித்தியடைய வில்லையெனில் தற்போதைய காலகட்டத்தில் அவரால் எதுவுமே செய்ய முடியாது.


இலங்கையின் உயர்கல்வி வரலாற்றில் 2020ஆம் ஆண்டு வெளியாகவுள்ள தொழில் நுட்பப்பட்டதாரிக்ள் தொடர்பான செயன்முறைக்கான அத்திபாரம் இம்மாதம் இடப்படுகிறது. அந்த வகையில் தற்போதைய கல்விப் பீடங்களையொத்த தொழில்நுட்ப பீடமும் உருவாக்கப்படவுள்ளது.

இன்று பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொண்டால் பல்வேறு வகையான பட்டங்கள் உண்டு. முன்னர் பீ.ஏ.எனக்கேள்விப்பட்டோம், பின்னர் பி.எஸ்.சி, பி.கொம், பி.ஈ.டி.எனவும் அறிந்துள்ளோம். அண்மைய காலங்களில் பி.பி.எஸ்.சி.போன்றதுறைகள் அமுலாகின. அதேபோன்று எதிர்காலத்தில் பி.டெக் என்ற துறை அறிமுகம் செய்யப்படும்.

அத்துடன் புதிதாக பாடசாலை பாடவிதானத்தில் தொழில்நுட்ப பாடத்துறை ஒன்றையும் அறிமுகம் செய்ய உள்ளோம். இது இருவகைப்படும் ஒன்று பொறியியல் தொழில்நுட்பம், மற்றயது உயிரியல் தொழில்நுட்பம் இவ் இரு துறைகளும் உயர்தரத்தில் அறிமுகமாகும் இதில் சிவில் பொறியியல், இயந்திரப்பொறியியல், மின்சாரப்பொறியியல் முதலானவை பொறியியல்துறை தொழில் நுட்பத்தில் சேரும்.

அதேபோன்று உயிரியல் தொழில்நுட்பத்தில் விவசாயம், விலங்குவேளாண்மை, உணவுத் தொழில்நுட்பம் என்பவை உள்ளடக்கப்படும்.

இதில் ஏதாவது ஒரு துறையை மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டும். மற்றைய பாடமாக கணிதம், விஞ்ஞானம், இராசாயனம், பௌதீகம் என்றவாறு ஏதாவது பொருத்தமானதாக அமையுமென அவர் மேலும் தெரிவித்தார்.



வெளிநாட்டு மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கும் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட மருத்துவபீட மாணவர்கள் 10 பேரை வெளியேற்றுமாறு தெரிவித்து சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர்கள் கொழும்பு விஜயராம சந்தியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்ட மொன்றில் ஈடுபட்டதனைக் காணலாம்.

# விசேட குழந்தை மருத்துவசிகிச்சை நன்கொடை கையளிப்பு இன்று

யாழ் குழந்தை மருத்துவ அலகிற்காக Colours of Courage முன்னெடுக்கும் முயற்சிக்கு Rotary International இன் உதவிகள் Trail என்பது 2011ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30,000 இற்கு மேற்பட்ட இலங்கையர்களின் பங்களிப்புடன் 27 நாட்கள் தொடர்ந்த பாதயாத்திரையாகும். இது Colours of Courage நிதியத்தின் முன்முயற்சியாக அமைந்திருந்தது. தெய்வேந்திர முனையில் இருந்து பருத்தித்துறை முனை வரை தொடர்ந்த பாதயாத்திரையில், நாடெங்கிலும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக ஒட்டுமொத்த தேசமும் ஒன்றிணைந்தது. யாழ். போதனா வைத்தியசாலையின் ஆற்றல்களை அதிகரித்து அதற்கு கூடிய வளங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக, வைத்தியசாலையில் புற்றுநோய் அலகை ஸ்தாபிக்கும் முயற்சிக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திரட்டுவது பாதயாத்திரையின் நோக்கமாக இருந்தது.

இன்று, இரண்டாண்டுகள் கழிந்த நிலையில், திட்டத்தின் முதற்கட்டம் அமுலாகிறது. இதன்கீழ், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் Sanken Lanka நிறுவனம் கதிரியக்க சிகிச்சை அலகை ஸ்தாபிக்கும். இதற்குரிய 33 சதவீதமான வேலைகள் பூர்த்தியாகியுள்ளன. இந்தத் திட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நிறைவு பெறவுள்ளது. இது ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவை மாத்திரமல்லாமல் தனிநபர்களும் வழங்கிய அமோக ஆதரவின் மூலம் சாத்தியப்பட்டது.

இந்தத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கமைய, யாழ். போதனா வைத்தியசாலையில் Pediatric High Dependency என்ற விசேட குழந்தை மருத்துவ சிகிச்சை அலகு ஸ்தாபிக்கப்படும்.

இலங்கையில் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திடசங்கற்பத்துடன் பாடுபடும் கொழும்பு கிழக்கு ரோட்டரிக் கழகம் இந்த அலகிற்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்க உதவி செய்தது. இந்தக் கழகத்திற்கு ரோட்டரி மன்றமும், அமெரிக்காவின் ஜோர்ஜியா பிராந்தியத்தைச் சேர்ந்த ரோட்டரி மாவட்டம் 6960 என்பதன் சர்வதேச ரோட்டரி பங்காளர்களும், இந்தியாவின் சென்னை நகரைச் சேர்ந்த ரோட்டரி மாவட்டம் 3230 இன் அங்கத்தவர்களும் நன்கொடை அளித்திருந் தார்கள்.

இவை வழங்கிய உதவிகள் மூலம் சிறுவர் அலகின் ஆற்றலும், அதன் வசதிகளும் மேம்படுத்தப்படும். இந்த நன்கொடையை சாத்தியப்படுத்துவதற்கு வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜுவலர்ஸும், ஏனைய பங்காளர்களும் வழங்கிய உதவிகளை சிறப்பாக குறிப்பிட வேண்டும்.

கொழும்பு கிழக்கு மாவட்டம் 3220 ரோட்டரிக் கழகத்தின் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நன்கொடையை கையளிக்கும் வைபவம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இதில் ரோட்டரிக் கழகம், சுகாதார அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள், Colours of Courage நிதியத்தின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட விருந்தாளிகள் பங்கேற்பார்கள்.

# மனைவிக்கு தீ வைத்தார் கணவன் மேல்நீதிமன்றம் மரணதண்டனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவில் தலவாய் கிராமத்தில் மனைவிக்குத் தீ வைத்துக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கணவனுக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

தலவாய்க் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான நடராசா சித்திரவேல் (வயது 49) என்பவருக்கே இவ்வாறு நேற்றுமுன்தினம் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நிதிபதி கே.சிவபாலசுந்தரம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

ஏறாவூர் தலவாய்க் கிராமத்தைச் சேர்ந்த இவருடைய மனைவியான தங்கராசா வனிதாவுக்கும் இவருக்கும் இடையில 2007ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆம் திகதி குடும்பப் பிர்ச்சினை ஒன்று ஏற்பட்டுள்ளது.

இவ்வேளையில் ஆத்திரமடைந்த குறித்த நபரின் மனைவி தான் தற்கொலை செய்யப் போவதாக கணவனை அச்சுறுத்தி தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றியுள்ளார். இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட கணவன் அவருக்கு தீ மூட்டியுள்ளார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. மனைவி மீது தீ வைத்துக் கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட இவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த ஏறாவூர் பொலிஸார் மட்டக்களப்பு நீதவான் நீமன்றத்தில் அவருக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்நிலையிலேயே மேற்படி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிபதி குறித்த நபருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# பல்கலை அனுமதி கிடைக்காவிடின் பிரத்தியேக பீடங்களில் கற்கவசதி

### —— பல்.கலை மானியங்கள் ஆணைக்குழு உத்தேசம் ——

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு கடனுதவி அல்லது புலமைப் பரிசில் வழங்கி மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களில் அனுமதிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

இவர்களுக்காக பிரத்தியேக மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் க்ஷனிக்கா ஹிரிம்புரேகம தெரிவித்தார்.

நாட்டில் உள்ள போட்டித் தன்மையைக் கருத்திற்கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், ஏனைய வழமையான மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களைப் போன்றே உரிய தரத்துடன் அவை பேணப்படும் எனவும் தெரிவித்தார்.

மிகவும் குறைந்தளவிலான புள்ளிகள் வித்தியாசத்தில் மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களில் அனுமதி பெறத்தவறும் மாணவர்களுக்காக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

பல்கலைக்கழக பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றின் ஊடாக மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# 24 இந்திய மீனவர்கள் மன்னார் கடலில்கைது

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்ததாகக் கூறப்படும் இந்திய மீனவர்கள் 24 பேர் மன்னாரில் நேற்றுமுன் தினம்.மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 24 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தலைமன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த 24 மீனவர்களும் 6 இழுவைப் படகுகளில் தலைமன்னார் கடற்பரப்பினுள் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

கைதுசெய்யப்பட்டுள்ள இந்த 24 மீனவர்களும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள 6 இழுவைப படகுகளும் தலைமன்னார் கடற்படை முகாமில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். கைதுசெய்யப்பட்ட 24 மீன வர்களையும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சுருக்கமான விடை தருக.

34) உணவு சமைக்கப் பயன்படும் பூக்கள் இரண்டு தருக.
1)........................................ 2)........................................

35) தாவர உண்ணிகள் இரண்டு தருக.
1)........................................ 2)........................................

36) தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் இரண்டு உபகரணங்கள் தருக.
1)........................................ 2)........................................

37) தோற்கருவிகள் இரண்டு தருக.
1)........................................ 2)........................................

38) மாப்பொருள் உணவுகள் இரண்டு தருக.
1)........................................ 2)........................................

39) பூரணமான உணவுகள் இரண்டு தருக.
1)........................................ 2)........................................

40). இலங்கையின் தேசியக் கொடியின் நிறங்கள் இரண்டு தருக.
1)........................................ 2)........................................

**பின்வரும் வசனங்களுக்குரிய கருத்தினைத் தமிழில் எழுதுக.**

41) From where are you? :........................................

42) Please give me a pencil? :........................................

43) May I read this book? :........................................

**ஒவ்வொரு தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

44) வீடு :........................................ 45) சகோதரன் :........................................

46) புதன்கிழமை :........................................

**பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக மாற்றி எழுதுக.**

47) கல்யாணி நன்றாக நடனம் ஆடுவாள் :........................................

48) காஞ்சனா நன்றாக நடனம் ஆடுவாள். :........................................

**வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

49) பாமதி........................................பட்டப்படிப்பைத் தொடர்ந்தாள்.
(பல்களைக்கழகத்தில், பல்கலைக்களகத்தில், பல்கலைக்கழகத்தில், பழ்கலைக்கழகத்தில்)

50) முயற்சி உடையார்........................................அடையார்.
(இகழ்ச்சி, இகழ்ட்சி, இகள்ச்சி, இகல்ச்சி)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

பொறுமையின் சிகரமாம் பூமாதேவியை கௌவி மூடிக்கொண்டிருந்த காரிருளானது மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. வானின் உச்சியிலே பளபளவென்று வைரங்களை வாரி இறைத்தது போல பிரகாசித்துக் கொண்டிருந்த சின்னஞ்சிறு விண்மீன்களின் வண்ண ஒளி 'படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது. கிழக்கு வானம் செக்கச் சிவந்து பிரகாசித்த வண்ணம் இருக்கிறது. ஆதவன் தன்து பொன்மயமான அழகிய ஒளிக்கதிர்களைப் பூமாதேவியின் மீது மெல்ல மெல்லப் படரவிடுகின்றான். தொடர்ந்து கீழ் வானில் பஞ்சு போன்ற முகில் கூட்டங்களுக்கு மத்தியிலே தங்கத் தகட்டைப் போன்று கதிரவன் மேலே எழத் தொடங்குகின்றான். தாமரை மலர்கள் தம் தலைவனின் வருகை கண்டு தலைநிமிர்ந்து முகமலர்ந்து, மொட்டவிழ்ந்து உவகையுடன் வரவேற்கின்றன. அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது. பறவைகளின் குதூகலமான இனிய நாதங்கள் வானில் பரவுகின்றன. ஆலயங்களில் மணியோசை மக்களை அகங்குளிரச் செய்கின்றன. வெள்ளைப் புறாக்களைப் போன்று பாடசாலைச் சிறார்கள். ஆகா!............என்ன இனிய காட்சி.

01. "வானம்" என்பதற்கு ஒத்தசொல் தருக.
........................................

02. இருக்கிறது என்பதை இறந்த காலத்தில் எழுதுக.
........................................

03. பந்தியில் காணப்படும் அடுக்குமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.
........................................

04. மணியோசை என்பதைப் பிரித்து எழுதுக.
........................................

05. "அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது" இவ் வாக்கியத்தின் எழுவாய் எது?
........................................

06. உவகை என்பதற்கு எதிர்ச்சொல் தருக.
........................................

07. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துடைய சொல் தருக.
1) விண்மீன்: ........................................ 2) ஆதவன் :........................................

08. 1) பந்தியில் காணப்படும் இணைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.
........................................
2) அடுக்கிடுக்குத் தொடர்ச் சொல் ஒன்றை எழுதுக.
........................................

09. பின்வரும் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
1) மலர் :........................................ 2) பாடசாலை :........................................

10. மேலே உள்ள பந்தியில் இரட்டை மொழியினை எழுதுக.
........................................

11) பின்வரும் தாவரங்களில் விதை மூலம் மட்டுமே விளைவது எது?
1. கொத்தமல்லி 2. அலரி 3. நொச்சி 4. பூவரசு

12) மீன்பிடித்துறையில் ஒரே முறையில் அதிக மீன்களைப் பிடிக்கக் கடினமான முறை.
1. டைனமற் மூலம் பிடித்தல் 2. வலை வீசுதல்
3. பொறிக்கூட்டில் பிடித்தல் 4. தூண்டில் போடுதல்

13) இலங்கையில் மிக நீண்ட நதி.
1. களனி 2. மகாவலி 3. வளவை 4. மல்வத்து ஓயா

14) இலங்கையில் இரு மதத்தவர் கொண்டாடும் ஒரு தினம்.
1. நத்தார் 2. எசலபெரஹரா 3. ரம்ழான் 4.சித்திரை வருடப் பிறப்பு

15) மின்சாரத்தினால் பாதிக்கப்பட்டவரை என்ன செய்யக் கூடாது?
1. நாம் அவரைக் கையால் பிடித்து இழுத்தல்
2. காய்ந்த மரத்துண்டுகளைப் பயன்படுத்தல்
3. பிரதான ஆளியை நிறுத்துதல்
4. இறப்பர் உறைகளை அணிந்து உதவுதல்

16) புரதான வரலாற்று எச்சங்களை ஆராய்ந்தும், பாதுகாத்தும் வருகின்ற திணைக்களம்.
1. சுற்றுலா கைத்தொழில் 2. தொல்பொருளியல்
3. கல்வித்திணைக்களம் 4. சுகாதாரத் திணைக்களம்

17) பின்வரும் உணவு வகைகளில் போசணை கூடியது.
1. பால் 2. சர்க்கரை 3. மீன் 4. கோதுமை மா

18) சந்தையில் பொருட்களை வாங்கும்போது கவனிக்க அவசியமற்றது ஒன்று.
1. விலை 2. நிறை 3. முடிவு திகதி 4. விளம்பர அலங்காரம்

19) சூரியனுக்கு மிக அண்மையிலிருப்பதால் மிக வெப்பமாயிருக்கும் கோள்.
1. வெள்ளி 2. புவி 3. செவ்வாய் 4. புதன்

20) தீ விபத்துக்குட்பட்டவர் செய்யக்கூடாதது.
1. மண்ணில் புரளுவது 2. ஓடுவது
3. சாக்கால் மூடுவது 4. நீரில் நனைத்த சேலையால் மூடுவது

21) வாகனங்கள் வீதியில் செல்லுமிடத்து அவற்றையும் பாதசாரிகளையும் குறிப்பிட்ட விதிப்படி நடத்துவது.
1. சாரணர் 2. தடுப்பு
3. சிவப்புமுன் விளக்கு 4. சமிக்ஞை விளக்கு

**பின்வரும் வாக்கியங்களை இணைத்து எழுதுக.**

22) மாலா பாடசாலைக்கு ஆயத்தமானாள்.
மாலா பஸ் வண்டியில் புறப்பட்டாள்.

.......................................................................................

.......................................................................................

23) மயூரன் மைதானத்தில் விளையாடினான்.
கண்ணன் மைதானத்தில் விளையாடினான்.


.......................................................................................

.......................................................................................



24) **14.50** கடிகாரத்தில் காணப்படும் நேரம் முற்பகலா? பிற்பகலா? என்பதை எழுதுக.

25) **வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்கள் விரும்பும் சிற்றுண்டி வகைகள் தொடர்பான தகவல்கள் சலாகை வரைபில் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




26. மிகக் கூடுதலானோர் விரும்பும் உணவு வகை யாது?

.......................................................................................

27. மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவு வகை யாது?

.......................................................................................

28. அதிகமானோர் விரும்பும் உணவுக்கும் மிகக் குறைந்தளவானோர் விருப்புக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

.......................................................................................

29. ஒரு தென்னந்தோட்டத்தில் 1860 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. அவை 3 லொறிகளில் ஒரே அளவில் ஏற்றப்பட்டன. ஒரு லொறியில் ஏற்றப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................

30. ஒரு புகை வண்டியில் 166 பிரயாணிகள் பயணம் செய்தனர். அடுத்த புகையிரத நிலையத்தில் அப்புகை வண்டியில் இருந்து 166 பிரயாணிகள் இறங்கினர். தற்போது புகை வண்டியில் பயணித்த பிரயாணிகள் எண்ணிக்கை யாது?

.......................................................................................

31. வான் சாரதி ஒருவர் ஒரு கிலோமீற்றர் பயணம் செய்ய 300 ரூபா பணம் அறவிடுகிறார். குமார் என்பவர் 5 கிலோமீற்றர் தூரம் பயணத்தை மேற்கொள்ள எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்?

.......................................................................................


**கீழே தரப்பட்ட பாடலில் உள்ள வெற்றிடங்களைப் பூரணப்படுத்தி எழுதுக.**

32) அருமைமிக்க ....................................................... எழுதவே

33) ஆசையாக. ....................................................... கொள்ளுவேன்.

# சீக்கிய தீவிரவாதத்தை உருவாக்க பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.முயற்சி

## உள்துறை அமைச்சு குற்றச்சாட்டு



(புதுடில்லி)

இந்தியாவில் சீக்கிய தீவிர வாதத்தை மீளவும் உருவாக்கும் முயற்சியில் பாகிஸ்தானின் ஐ. எஸ்.ஐ.பிரிவு ஈடுபட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் சுசில் குமார் .ஷிண்டே குற்றம் சுமத்தியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது,


சீக்கிய பயங்கரவாத அமைப் புகளில் பல்வேறு மாறுபாடுகள் தென்படுகின்றன. பாகிஸ்தானி லுள்ள அதன் அமைப்புகளுக்கு பஞ்சாப் மற்றும் இதர மாநிலங் களில் சதித்திட்ட வேலைகளில் ஈடுபடும்படி நெருக்கடி தருகிறது. மேலும் பாகிஸ்தானிலுள்ள உளவு அமைப்பின் மையங்களில் சீக் கிய இளைஞர்களுக்கு பயிற் சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

சிறையில் வாடும் தங்களது அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் கள் மற்றும் வேலையில்லாத இளைஞர்கள் ஆகியோரை தேர்ந்தெடுத்து பயங்கரவாத செயல்களில் ஈடுபட செய்ய பாகிஸ்தானைச் சேர்ந்த சீக்கிய பயங்கரவாத அமைப்புகள் முயற்சி செய்து வருகிறது. மேலும் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் வசித்துவரும் சீக்கியர்களையும் பயங்கரவா தத்தில் இணையும்படி வற் புறுத்தப்படுகின்றனர். எல்லைப் புற மாநிலங்களான ராஜஸ் தான், பஞ்சாப் மாநிலங்கள் வழியே ஆர்.டி.எக்ஸ் வகை வெடி மருந்து கடத்துதல் மற் றும் இந்திய ரூபாய்களை அச் சிட்டு கடத்துதல், புழக்கத்தில் விடுதல் போன்ற செயல்களி லும் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல் பயங்கர வாத அமைப்புகளும் நவீனதொழில் நுட்பங்களான சாட்டிலைட் போன்கள், இ-மெயில் வாய்ஸ் ஓவர் இண்ரநெற் புரோட்டா கால் போன்றவற்றையும் பயன் படுத்துகின்றனர். இந்தியாவிற்கு எதிரான பயங்கரவாத அமைப் புகள் அண்டை நாடுகளான நேபா ளம், வங்களா தேசம் வழியாக தங்களது உறுப்பினர்களை இந்தி யாவிற்குள் அனுப்பி வைக்கும் தளமாக பயன்படுத்தி வருகின் றனர். இவ்வாறு மத் திய உள் துறைஅமைச்சர் சுசில் குமார் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

இந்தியச் செய்திகள்

# காலில் விழும் போட்டி



அ.தி.மு.க.தலைமை அலுவலகத்தில், தே..மு.தி.க.உள்ளிட்ட பிற கட்சியினர், அ.தி.மு.க.வில், ஐக்கியமாகினர். இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த, முதல்வர் ஜெயலலிதாவிடம், அமைச்சர்கள் உட்பட முக்கிய நிர்வாகிகள், காலில் விழுந்து ஆசி வாங்குவதைக் காணலாம்.

# குஜராத் குறித்து மட்டுமே நரேந்திர மோடிக்கு தெரியும்

## விமர்சிக்கிறார் குர்ஷித்

பாரதிய ஜனதா சார்பில் பிரதமர் வேட்பாளராக அறிவிக் கப்படலாம் எனக் கூறப்படும், குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு, அவர் மாநிலத்திற்கு வெளியே நிலவும் பிரச்சினைகள் குறித்து எந்த தகவலும் தெரியாது என வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குரஷித் விமர்சித்துள்ளார். டில்லியில் நடை பெற்ற முதலமைச்சர் மாநாட்டில் பேசிய நரேந்திர மோடி, மாவோ யிஸ்ட் விவகாரத்தில் மத்திய அரசு மென்மையான நிலைப்பாட்டை கடைப்பிடிப்பதாக குற்றம்சாட்டியிருந்தார். இதுகுறித்து வெளி யுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் செய்தியாளர்கள் விளக்கம் கேட்டனர்.

அப்பேது பேசிய குர்ஷித், குஜராத்திற்கு வெளியே நிலவும் பிரச்சினைகள் பற்றி மோடிக்கு தெரியாது என்றும், மாவோயிஸ்ட் விவகாரத்தில், அத்வானி கூறியதைப் போல் அனைவரும் ஒருங் கிணைந்து போராட வேண்டும் என்பதை மோதி உணர வேண்டும் என்றும் கூறினார்.

# இலங்கைத்தமிழர் பிரச்சினை மத்திய அரசு பாராமுகம்

## கவலையடையும் ஜெயலலிதா



"இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை, மத்திய அரசு, சரியான முறையில் அணுக வில்லை. தமிழக மீனவர்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணமாக இருக்கும், கச்ச தீவை, இலங்கையிடம் இருந்து திரும்பப் பெற வேண்டும்" என, தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தினார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற, உள்நாட்டு பாது காப்பு குறித்த முதல்வர்கள் மாநாட்டில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உரையை, அமைச்சர் முனுசாமி வாசித் தார்.

அதில், முதல்வர் ஜெயலலி தா தெரிவித்திருந்ததாவது,

இலங்கையில், தமிழர்கள், இரண்டாம் தரக் குடிமக்களாக நடாத்தப்படுகின்றனர். அவர் களின் துயரங்கள், நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள் ளன. இவ்விஷயத்தில், மத்திய அரசு, பாராமுகமாக உள்ளது. இனப் பிரச்சினை குறித்த போர் முடிந்து, பல ஆண்டுகள் ஆகி விட்டன. ஆயினும், இந்தப் பிரச் சினை குறித்து, உரிய முறை யில் அணுகாமல், மத்திய அரசு, அலட்சிய மனப்பான்மையுடன் உள்ளது. இலங்கைத் தமிழர்கள் விஷயத்தில், சரியான அணு குமுறை கடைப்பிடிக்கப்பட வில்லை.

தமிழர்களின் உரிமையை நிலைநாட்டுவதில், மத்திய அரசு முற்றிலும் தோற்று விட்டது தமிழக மீனவர்களின் பாது காப்பு, கேள்விக்குறியாகி விட் டது.

தமிழக மீனவர்களின் பிரச் சினை குறித்து, மத்திய அர சுக்கு பலமுறை கடிதம் எழு தியும், நேரில் முறையிட்டும், எந்தப் பயனும் இல்லை. சொந்த நாட்டு மீனவர்களைக் கூட பாது காக்க முடியாமல் இருக்கும் அவலம், உண்மையிலேயே வருந்தத்தக்கது.

இந்தப் பிரச்சினைக்கு, நிரந்தர முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒரே வழி, கச்சதீவை மீட்பது தான். அதைத் தவிர, வேறு எந்தத் தீர்வும் இருக்க முடி யாது.

கடந்த, 1974ஆம் ஆண்டு அப்போதைய நாடாளுமன்றில் ஒப்புதல் இல்லாமலேயே, தமி ழக மக்களின் நலனுக்கு விரோ தமாக, மத்திய அரசு, தன் விருப்பத்தின் படி, கச்சதீவை, இலங்கைக்கு தாரை வார்த்தது. அது தான் இன்றைய தமிழக மீனவர்களின் அத்தனை பிரச் சினைக்கும் காரணம்.

எனவே, கச்சதீவை மீட்கும் நடவடிக்கையை, மத்திய அரசு எடுக்க வேண்டும் இந்திய கடல் எல்லையை, மறுபடியும் திருத்தி அமைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க பெண்மணிமீது பாலியல் துஷ்பிரயோகம்

இந்தியாவின் இமாச்சல பிரதேசத்தில் 30 வய தான அமெரிக்கப் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சந்தேகத்தின் பேரில் 3 பேரை இந்தியப் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

"மனலி" என்னும் இடத்தில் ஒரு டிரக் வண்டி யில் ஏறிச் செல்ல இந்தப் பெண் கேட்டதை அடுத்து, அவரை ஏற்றிச் சென்ற அவர்கள் அந் தப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்ப டுத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று நடந்த இந்தச் சம்ப வத்தில் ஒரு தனியான இடத்துக்கு அந்தப் பெண் ணைக் கொண்டு சென்ற அவர்கள் அங்கு அவரை பலாத்காரம் செய்ததுடன், அவரிடமிருந்த பொருட்களையும் பறித்துச் சென்றிருக்கிறார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வஸிஸ்த் என்னும் இடத்துக்குச் செல்வதற்காக வாடகைக் காருக்கு காத்திருந்த வேளையி லேயே இந்தப் பெண்ணுக்கு அந்த டிரக்கில் வந்தவர்கள் "லிப்ட்" கொடுக்க முன்வந்திருக்கி றார்கள்.

கடந்த மார்ச் மாதத்தில் இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் ஒரு சுவிஸ் நாட்டுச் சுற்றுலாப்பயணி பலரால் கூட்டாகப் பாலியல்பலாத்காரத்துக் குள்ளாக்கப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு தற் போது இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. அந்தச் சம்பவம் தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டி ருக்கிறார்கள்.

இந்தியாவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி கள் இலக்கு வைக்கப்படுவது அபூர்வமாக இருந் தாலும், பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அதி கரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

# தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுவிட்டதென குற்றச்சாட்டு



தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுவிட்டதாக தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார். மதுரை யில் நேற்று முன்தினம் நடை பெற்ற தி.மு.க. பொதுக்கூட்டத் தில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

வேண்டியவர் வேண்டாதவர் எனப் பார்த்துப் பார்த்து வழக்குகள் தொடுக்கப்படுவதாகக் குறிப் பிட்ட ஸ்டாலின் இதற்கு ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் குடும்பமும் விதிவிலக்கல்ல என்றார். அதேநேரத்தில் அ.தி.மு.க.வினர் மீது நீதிமன்றம் வலியுறுத்தினால் மட்டுமே வழக்குகள் போடப்படு வதாகவும் அவர் தெரிவித்தார்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறா ரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் செரீப் பதவியேற்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மூன்றாவது முறையாக பிரதமராக பதவி ஏற்ற நவாஸ் செரீப் மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றப் போவதாக வாக்குறுதியளித்தார்.

பாகிஸ்தானில் கடந்த மாதம் 11 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடநதது. இந்தத் தேர்தலில் நவாஸ் செரீப்பின் (வயது 63) பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தனிப்பெரும் கட்சியாக வந்தது. சிறிய கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் ஆதரவுடன் நவாஸ் செரீப் கட்சி பெரும்பான்மைப் பலம்பெற்றது.

இதையடுத்து புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. இந்தத் தேர்தலில் நவாஸ் செரீப், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் சார்பில் மக்தூம் அமின் பாஹிம், இம்ரான்கானின் தெக்ரிக் இ இன்சாப் கட்சி வேட்பாளர் ஜாவத் ஹாஷ்மி ஆகியோர் போட்டியிட்டனர்.

ஆனால் பெரும்பான்மை எம்.பி.க்களின் ஆதரவைப் பெற்று விட்டதால், எதிர்பார்த்தபடியே நவாஸ் செரீப் அமோக வெற்றிபெற்றார்.

342 எம்.பி.க்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் நவாஸ் செரீப்புக்கு 244 வாக்குகள் கிடைத்தன. பாகிஸ்தான் மக்கள் கட்சி வேட்பாளர் மக்தூம் அமின் பாஹிம் 42 வாக்குகளை மட்டுமே பெறறார். இம்ரான்கான் கட்சி வேட்பாளர் ஜாவத் ஹாஷிமிக்கு 31 வாக்குகள் கிடைத்தன.

இந்த வெற்றியின் மூலம் 13 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் செரீப் 3 ஆவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, புதிய சரித்திரம் படைத்துள்ளார்.

அத்துடன் பாகிஸ்தானின் 18 ஆவது பிரதமரும் இவரேயாவார்.

பிரதமர் தேர்தலில் வெற்றி பெற்றதும் நாடாளுமன்றத்தில் நவாஸ் செரீப் பேசினார்.

அப்போது அவர், நாட்டை ஜனநாயகம் மட்டுமே முன்னோக்கி அழைத்துச்செல்ல முடியும் என்பதைத் தேர்தல் வெற்றி காட்டுகிறது. மக்கள் என் மீது நம்பிக்கை கொண்டு ஆட்சியில் அமர்த்தியுள்ளனர். அவர்களின் நம்பிக்கையை நிறைவேற்றுவேன் எனக் கூறினார்.

தொடர்ந்து புதிய பிரதமர் பதவி ஏற்பு விழா, இஸ்லாமாபாத்தில் உள்ள அதிபர் மாளிகையில் நடைபெற்றது. நவாஸ் செரீப்புக்கு அதிபர் ஆசிப் அலி சர்தாரி பதவிப்பிரமாணமும், இரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

# மைக்கல் ஜாக்சனின் மகள் தற்கொலைக்கு முயற்சி



மறைந்த பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சனின் மகள் பாரிஸ் ஜாக்சன் தற்கொலைக்கு முயன்றதை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்திலுள்ள ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பாரிசின் உடல் நிலை தேறி வருவதாக அவரது தாயார் டெப்பி ரோவ் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்ட பாரிஸ், அம்புலன்ஸ் மூலம் நேற்றுமுன்தினம் வீடு திரும்பி விட்டதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது. 15 வயதான பாரிஸ் ஜாக்சன் அதிக தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். தற்கொலை முயற்சிக்கான காரணம் குறித்து இதுவரை உறுதியாகத் தெரியவில்லை. எனினும், பாரிசின் தந்தை மைக்கல் ஜாக்சன் கடந்த 2009 ஆம் ஆண்டு இறந்ததன் சோகம் காரணமாக அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

1996 இல், மைக்கல் ஜாக்சனை திருமணம் செய்த டெப்பி ரோவ்-க்கு பிரின்ஸ் ஜாக்சன், பாரிஸ் ஜாக்சன் என இரு குழந்தைகள் உள்ளனர். எனினும் இத்தம்பதியினர் 1999 இல் விவாகரத்துப் பெற்றனர்.

# பாதுகாப்பு ஆலோசகராக சூசன்ரைஸ் நியமனம்

உலகச் செய்திகள்



அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக சூசன்ரைஸ் நியமிக்கப்படுவார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

தற்போதைய, அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டொம் டொனிலான் (Tom Donilon) அடுத்த மாதம் ஓய்வு பெற்றவுடன் சூசன் ரைஸ் அந்தப் பொறுப்பை ஏற்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதிபர் பராக் ஒபாமாவுக்கு நெருக்கமானவராகக் கருதப்படும் சூசன்ரைஸ், தற்போது அமெரிக்காவுக்கான ஐ.நா. தூதராகச் செயற்படுகிறார்.

அமெரிக்க அதிபராக இரண்டாவது முறை பதவியேற்கும் போது சூசன் ரைசை அமைச்சராக்க முயன்ற ஒபாமா, எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியின் எதிர்ப்பால் பின்வாங்கினார்.

இதையடுத்து, தற்போது அமெரிக்க அரசு நிர்வாகத்தின் முக்கிய பொறுப்புக்கு அதிபர் ஒபாமாவால் அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு, செனட் சபையின் ஒப்புதல் தேவையில்லை என்பதால் சூசன் ரைஸ் பொறுப்பேற்பதில் சிக்கல் ஏதும் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சிரிய படையினர் தாக்குதல் அமெரிக்கா கடும் கண்டனம்




சிரிய அரச படையினர் குவாசியர் நகரில் நடத்திய தாக்குதல்களுக்கு அமெரிக்கா கண்டனம் வெளியிட்டுள்ளது. கடுமையான போராட்டத்தின் பின்னர் கிளர்ச்சியாளர்களின் பிடியிலிருந்து குவாசியர் நகரத்தை அரச படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குவாசியர் நகரில் மேற்கொள்ளப்பட்ட கொடூரத் தாக்குதல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஜேய் கேர்னி தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியாளர்களை தனித்து எதிர்க்க முடியாத காரணத்தினால் அரச படையினர் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் போன்ற தரப்பினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

குவாசியர் நகரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

# பேச்சு சுதந்திர விழிப்புணர்வு போலந்தில் விருது வழங்கும் விழா




(கொழும்பு)

பேச்சு சுதந்திரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஆற்றிய பணிகளுககாக, எல்லைகளற்ற செய்தியாளர்கள் என்ற அரசு சாரா அமைப்பு, சர்வதேச பத்திரிகையாளர் அமைப்பின் விருதினை போலந்தில் பெற்றுள்ளது.

சுமார் 20 நாடுகளின் பத்திரிகையாளர் அமைப்புகளை அங்கத்தவராக கொண்டுள்ள ஐ.ஏ.பி.சி. எனப்படும் சர்வதேச பத்திரிகையாளர் அமைப்பு முதல் முறையாக இது போன்ற ஒரு விருதை வழங்கியுள்ளது.

இந்த விருதினைப் பெற்றுக்கொண்ட எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பின் செயலர் கிரிஸ்டொப் டெலோர் (Christophe Deloire), உலகெங்கிலும் சிறைகளில் இருக்கும் 180 இற்கும் மேற்பட்ட செய்தியாளர்களுக்கும், செய்தி சேகரிப்பு பணியின்போது உயிர் நீத்தவர்க்ளுக்கும் விருதினை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.

# விண்வெளியில் ஆய்வுகூடம் அமைக்கும் முயற்சியில் சீனா

(பீஜிங்)

விண்வெளியில், ஆய்வு கூடத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சீனா, ஆராய்ச்சிக்காக, தனது இரண்டாவது விண்கலத்தை விரைவில் அனுப்பவுள்ளது.

விண்வெளியில் தற்போதுள்ள, அனைத்து உலக விண்வெளி நிலையம், அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டது.

அமெரிக்கா, ரஷ்யா உளளிட்ட நாடுகளைச் சேர்நத விண்வெளி வீரர்கள் இந்த விண்வெளி நிலையத்தில் தங்கி ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்குத் தேவையான, உணவு, பிராண வாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள், விண்கலம் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன.

இதற்கிடையே, சீனா, வரும் 2020 இற்குள், விண்வெளியில் ஆய்வு கூடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

இது தொடர்பாக, ஏற்கனவே ஒரு விண்கலத்தை அனுப்பி ஆய்வு மேற்கொண்டது. விரைவில் 2 ஆவது விண்கலத்தை அனுப்ப திட்டமிட்டுள்ளது.

ஷென்ஜோ உ எக்ஸ் என்ற இந்த விண்கலத்தில், விமானப் படையில், ஓட்டியாகப் பணி புரியும், வாங் யாபிங்,35, செல்கிறார். இதன் மூலம், விண்வெளிக்குச் செல்லும், 2 ஆவது சீனப் பெண் என்ற சிறப்பை இவர் பெறுகிறார்.

# புகுஷிமா அணு உலையில் மீளவும் நீர்க்கசிவு

ஜப்பானில் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கடும் நிலநடுக்கம் மறறும் அதனைத் தொடர்ந்து வந்த சுனாமி பேரலைகளின் தாக்குதல் காரணமாக புகுஷிமா அணு உலையிலிருந்து அணுக்கதிர் கசிவு ஏற்பட்டது. இதன் காரணமாக புகுஷிமா அணுஉலையில் செயறபாடுகள் நிறுத்தப்பட்டது.


அணுக் கதிர்வீச்சு பாதிப்புள்ள நீரை பாதுகாத்து வைக்கும் நூற்றுக்கணக்கான இரும்புத் தொட்டிகளில் ஒன்றில் தற்போது கசிவு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் மீண்டும் கதிர் வீச்சு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனை அந்த ஆலையின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர். ஆனால் இந்த கசிவு மிகக் குறைந்த அளவே ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

புகுஷிமா அணு உலை உள்ள பகுதியில் நிலத்தடி நீரில் சீசியம் துகள்கள் இருபபதை ஆலை நிர்வாகம் சமபத்தில் தான் ஒத்துக்கொண்டது.

# அதிக உதவிகளைப் பெற்று அபிவிருத்தியின் உச்சத்துக்கு செல்வோம்

(யாழ்ப்பாணம்)

அரசிடமிருந்து எவ்வாறான அணுகுமுறையில் உதவித்திட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமோ அந்த வகைகளில் அணுகுவதனூடாக பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமென ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.



யாழ். மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தியின் மணிவிழா நிகழ்வில் நேற்று பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலை அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் கல்வியில் அக்கறையுடன் செயற்படுபவர்களை அணுகி இப்பாடசாலைகளின் தேவையினை பூர்த்தி செய்து இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வித்திட்டவராக விழாவின் கதாநாயகன் காணப்படுகிறார். பாடசாலைக்குத் தேவையான கட்டட வசதிகளை உரிய இடங்களில் கோரிக்கைகளை முன்வைத்துப் பெற்றுக் கொண்டதுடன், இராணுவத்தினர் வசம் காணப்பட்ட பாடசாலைக்குரிய விளையாட்டு மைதானத்தினை தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் என்னிடம் விடுத்த கோரிக்கையினை அடுத்து குறித்த மைதானத்தினைப் பாடசாலை சமுதாயத்திற்கே பெற்றுக் கொடுத்துள்ளார். இவ்வாறு பாடசாலையினை மத்திய கல்லூரியாக்குவதில் இவரின் முயறசியினை மறுக்கமுடியாது.

இவ்வாறு யாரிடம் சென்று அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியுமோ அவர்களை இனங்கண்டு அவர்களிடம் கோரிக்கைகளை முன்வைத்து தனது பாடசாலையின் பௌதீக வளங்கள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வித்திட்டவராக இன்றைய கதாநாயகன் காணப்படுகின்றார்.

இன்றைய நாள் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையே மாணவர்களின் எதிர்காலத்தினையும் சுபீட சமான அறிவுமிக்கதோர் தலைமுறையையும் கட்டியெழுப்பும் வளர்ந்து வரும் நவீன உலகில் கல்வியின் பங்களிப்பானது இன்றியமையாத ஒன்றாக வளர்ந்து வருகிறது எனவே மாணவர்கள் பாடவிதானச்செயற்பாடுகளில் செலுத்தும் அக்கறையே அவர்களின் எதிர்கால வாழ்க்கையினை தீர்மானிக்கும் காரணியாகவுள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் இப்பாடசாலை அதிபருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பாகவும் தன் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ் பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வராசா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணகுமார், பாடசாலை அதிபர்கள் உட்பட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.




நெல்லியடி தேசிய அபிவிருத்தி வங்கிக் கிளை திறப்புவிழாவின் போது... (01)

## 13 குறித்து...

திட்டத்தை முன்வைக்கப்போவதாகத் தெரிகிறது.

இந்தத் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானநதா, இது குறித்து தமிழோசையிடம் கூறுகையில், இந்தக் கூடடத்தில் இந்தப் பிரேரணைகள் குறித்த விளக்கங்கள் மொழி பெயர்ப்பாக தமக்குக் கொடுக்கப்பட்டாலும், அதற்குரிய போதிய விளக்கங்கள் இல்லாததால், இது குறித்து தன்னால் உடனடியாக ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்கமுடியவில்லை என்றும் இதற்குரிய அவகாசம் தேவை என்றும் தெரிவித்தார்.

ஆனால் தமிழர்கள் பிரச்சின்னைகளை அணுகின்றபோது, இனவாத நிலைப்பாட்டையோ அல்லது தொடர்ந்து சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலையையோ தவிர்க்கவேண்டும் என்றும் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகும் இந்த நிலை தொடர்வது சரியல்ல என்றும் தான் இந்தக் கூட்டத்தில் கூறியதாக அவர் தெரிவித்தார்.

இதற்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதிலளித்து பேசுகையில், உங்களை நாங்கள் நம்புகிறோம், அதனால்தான் உங்களை (டக்ளஸை) அமைச்சரவையில் வைத்திருக்கிறோம், ஆனால் தமிழர்களின் பிரச்சினை வேறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சினைகள் வேறு என்று கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் 13 ஆவது சட்டத்திருத்தத்தின் கீழ் தரப்பட்ட அதிகாரங்களைவிட கூடுதல் அதிகாரங்கள் தரப்படவேண்டும் என்ற கோரிக்கை இருக்கும் நிலையில், இருக்கின்ற அதிகாரங்களையும் குறைப்பது என்று அரசு உத்தேசித்தால், அது குறித்து என்ன நிலைப்பாடு எடுப்பீர்கள் என்று கேட்டதற்கு பதிலளித்த அவர், இது குறித்து ஆராய்ந்துதான் பதிலளிக்கவேண்டும், ஏனென்றால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு என்று அரசு கூறும் போது, அவசரப்பட்டு ஒரு நிலைப்பாட்டை எடுக்கமுடியாது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நல்லூரில்...

யாழ். மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நல்லூரில் வழிபாட்டில் ஈடுபட்ட மேற்படி இந்தியக் குழுவினர் காலை 9 மணிக்கு யாழ். பொது நூலகத்துக்குச் சென்றனர். இக்குழுவினரை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா வரவேற்றதுடன், நூலகம் தொடர்பான தகவல்களையும் 1981 ஆம் ஆண்டில் அது எரிக்கப்பட்ட விடயம் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

## சிவில் சமூகப்...

இலங்கையின் சட்டம் ஒழுங்கை மேம்படுத்த அமெரிக்கா முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமை இந்த உதவியின் மூலம் நிரூபணமாகியுள்ளதாக அமெரிக்கத் தூதுவர் சிஸன் மேலும் தெரிவித்துள்ளார்.

இரசாயன பகுப்பாய்வு உள்ளிட்ட பல்வேறு நீதிமன்றத் துறையின் மேம்பாட்டுக்குத் தேவையான வசதிகளை இந்த ஆய்வு கூடம் கொண்டமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மரம் நடுகையும் சிரமதானமும்

(திருநெல்வேலி)

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் மரம் நாட்டு விழா நடைபெற்றது. நேற்று இடம்பெற்ற இவ் வைபவத்தில் இல்ல அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள், முதியவர்கள் எனப் பலர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.

விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடைபெற்றது. சமூக சேவைத திணைக்களத் தலைமைப் பீடத்தைச் சேர்ந்த என்.ராஜமனோகரன் சுற்றுச்சூழல் சம்பந்தமான கருத்துரைகளை வழங்கினார்.

யாழ். மாநகரசபையின் துப்புரவு செய்யும் பாரிய வாகனம் மூலம் இல்லத்தின் வளவு துப்புரவாக்கப்பட்டது. தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இச் சிரமதானப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டது. (137)

# வர்த்தகர் கொலை; மூன்று பொலிஸார் கைது

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் வைத்து வர்த்தகர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் மூவர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப்புலனாய்வுப் பிரிவினராலேயே இவர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் இருவர் சிவிலியன்கள் என்றும் ஒருவர் சப்-இன்ஸ்பெக்டர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சிவிலியன்கள் இருவரும் பெண்கள் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தொம்பே பகுதியில் வைத்து கடந்த 22 ஆம் திகதி கடத்தப்பட்ட வர்த்தகர் பம்பலப்பிட்டி பகுதியில் வைத்து கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

## தெரிவுக்குழுவிற்கு...

தெரிவுக் குழுவில் பங்கேற்காமையே, பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைக் காண்பதில் ஏற்கனவே காலதாமதம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். எனவே இப்போது 13 ஆம் திருத்தம் தெரிவுக் குழுவில் ஆராயப்படும் போது என்றாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதில் இணைந்துகொள்வது அவசியம் என்றும் ஊடக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பொதுநலவாய...

சுற்றுலாத்துறை மற்றும் கல்வி போன்ற துறைகள் தொடர்பிலும் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாதிரி பண்ணைகளை இலங்கையில் உருவாக்குவதற்கும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கும் நியூசிலாந்து இணக்கம் வெளியிட்டுள்ளது.

## அதிகாரங்களை...

உறுப்பினர்கள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். ஜனநாயக விழுமியங்களை பேணிப் பாதுகாத்தல், யுத்தத்தின் பின் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் போன்ற விடயங்களில் பாதிப்பு ஏற்படுத்தக் கூடுமென சுட்டிக்காட்டியுள்ளது. 13 ஆம் திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்படக் கூடாது எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை வழங்குவதாக இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி அளித்துள்ள நிலையில், 13 ஆம் திருத்தச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த மேற்கொள்ளும் முயற்சி ஏற்புடையதல்ல என சுட்டிக் காட்டியுள்ளது.

சகல இன மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய காத்திரமான ஓர் அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் வலியுறுத்தியுள்ளது.

## நெடுந்தீவு...

அத்துமீறி நுழைந்தபோது, நெடுந்தீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 25 மீனவர்களையும் நெடுந்தீவுக் கடற்படையினர் நேற்றுக் காலை யாழ். மாவட்ட நீரியல் வளத்துறை மற்றும கடற்றொழில் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதேவேளை, கைதுசெய்யப்பட்ட இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாகத் தகவல் இலங்கைக்கான இந்திய துணைத்தூதுவர் அலுவலகத்திற்கு யாழ். மாவட்ட நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

தகவலின் பிரகாரம் இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் அலுவலக அதிகாரி, இராமேஸ்வரம் பகுதி மீனவர்களை பார்வையிட்டதுடன், மீனவர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டினர். இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர்கள் மற்றும் யாழ். மாவட்ட நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தினர் .கைதுசெய்யப்பட்ட 25 மீனவர்களிடம் வாக்கு மூலங்களை பதிவு செய்யப்பட்ட பின்னர் நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

# கிளிநொச்சியின் அபிவிருத்திக்கு பிரதேசசபை முட்டுக்கட்டை

## 210 மில்லியன் ரூபா முடக்கம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் மேற்கொள்ள வேண்டிய 210 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டம் கரைச்சி பிரதேசசபையால் முடக்கப்பட்டுள்ளது. சந்தை அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தின் விளைவாகவே அடுத்தகட்ட பணியை மேற்கொள்ளமுடியாதுள்ளது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளி.நகர் மக்களின் தேவைகள் குறித்து மக்களுடன் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் குறிப்பிடுகையில், சந்தையில் இரு மாடிக் கட்டடத்தொகுதியை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் திட்டமிடப்படாத கடைத்தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளதால் இவ்வேலைத் திட்டம் முடங்கிப்போயுள்ளது. இவ்வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தமும் வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படத் தயாரான நிலையிலேயே இவ்வாறான நிலை பிரதேச சபையினரால் உருவாக்கப்பட்டுள்ளது. இதேவேளை, திட்டமிடப்படாது அமைக்கப்பட்டுள்ள கடைத்தொகுதிகளால் சந்தை அமைப்பின் திட்டத்திற்கமைவாக அமைக்கப்பட்ட கடைத்தொகுதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீள்குடியேற்றத்தின் ஆரம்பம் தொடக்கம் அம்பாள் குளத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு நட்டத்திலேயே தொழிலை மேற்கொண்டு வந்தவர்களின் வாழ்வாதாரம் மேலும் முடக்கப்படும் நிலை உருவாகியுள்ளது எனத் தெரிவித்த அவர்,

சந்தை நிர்மாணிக்கப்பட்ட போது ஏற்படுத்தப்பட்ட இயற்கைச் சூழலும் தொடர்ந்தும் பேணப்படாததால் அவை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார் அத்தோடு சந்தைப்பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவேளை சந்தைக் கட்டடத்தை அமைப்பதற்காக 280 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டவேளை சந்தைக்காக இப்பெருந்தொகை நிதியை செலவிடுவது பொருத்தமற்றதெனவும் பாரிய கட்டடத் தொகுதிக்குள் சந்தை அமைவது பொருத்தமற்றது எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் மாவட்ட அபிவிருத்தியின் முதன்மைத் தளங்களில் ஒன்றாகிய இச்சந்தையை அமைப்பதனூடாக சுமார் 350 இற்கும் அதிகமான வர்த்தகர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கும் நோக்குடனும நகரின் இயற்கைச்சூழலுக்கு மேலும் மெருகூட்டும்வகையிலும் நன்கு திட்டமிடப்பட்டு சந்தை அமைக்கும்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் திட்டமிடப்பட்டு நேர்த்தியாக அமைக்கப்பட்ட சந்தையின் வடிவமைப்பு இன்று மாற்றப்பட்டுள்ளமையும் சந்தைத்தொகுதியின் அடுத்தகட்ட அபிவிருத்தி முடக்கப்பட்டுள்ளதும் எம்மக்களின் தூரதிஷ்டமே எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன், கரைச்சிபிரதேச செயலர் நாகேஸ்வரன் கிளி.நகர் கிராம அலுவலர் செல்வரத்தினம் உட்பட மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பெருமளவான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# மின் தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்று காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் நவிண்டில் தாமோதரம் வித்தியாலயத்திலிருந்து இரும்பு மதவடி வரையான பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

நாளை சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையான பிரதேசம், மனோகரா பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி, நாவற்குழி, அச்சுவேலி இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டைமானாறு வீதிப் பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

09.03.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, விஞ்ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, ஈச்சமோட்டை, பாசையூர், குருநகர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, வல்லை முதல் மந்திகை வரையயான வடமராட்சிப் பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,


10.06.2013 திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மதியம் 12.30 மணிவரையும் தொண்டைமானாறு வீதிப்பிரதேசம், குஞ்சர்கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

11.06.2013 செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மானிப்பாய் ஈஞ்சை வைரவர் கோவில்ப் பிரதேசம், மாலுசந்தி, அல்வாய், வியாபாரிமூரலப் பிரதேசங்கள், நவிண்டில் தாமோதரம் வித்தியாலயத்திலிருந்து இரும்பு மதவடி வரையான பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

12.06.2013 புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அச்சுவேலி இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

13.06.2013 வியாழக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு ஒரு பகுதி, வதிரி, அல்வாய்ப் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம், மானிப்பாய் ஈஞ்சை வைரவர் கோவில்ப் பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# சம்பியன் டிராபி லீக் போட்டியில் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இந்தியா



தென் ஆபிரிக்காவுக்கு எதிரான சம்பியன்ஸ் டிராபி லீக் போட்டியில் இந்திய அணி 26 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இங்கிலாந்தில், 7 ஆவது மற்றும் கடைசி சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் நேற்று முதல் வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் அவுஸ்ரேலியா உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன. கார்டிப் நகரில் நேற்று நடைபெற்ற 'பி' பிரிவு லீக் போட்டியில் இந்தியா, தென் ஆபிரிக்கா அணிகள் விளையாடின.

நாணயச் சுழற்சியில் வென்ற தென் ஆபிரிக்க அணி கப்ரன் டிவிலியர்ஸ், களத்தடுப்பைத் தேர்வு செய்தார். இதனையடுத்து இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்திய அணியில் முரளி விஜய் தேர்வு செய்யப்படவில்லை. ரோகித் சர்மா, தினேஷ் கார்த்திக் இடம் பிடித்தனர். காயம் காரணமாக தென் ஆபிரிக்க அணியின் ஸ்டைன் இடம்பெறவில்லை.

இந்திய அணிக்கு ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி நல்ல ஆரம்பமாக அமைந்தது. டிசாட்சொபே பந்துவீச்சில் ரோகித் தலா ஒரு பவுண்டரி, சிக்சர் விளாசினார். மறுபுறம், பீட்டர்சன் ஓவரில் தவான் தொடர்ச்சியாக இரு பவுண்டரி அடித்தார். அரைச் சதம் கடந்த ரோகித் சர்மா 65 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் கிளைன்வெல்ட் ஓவரில், ஹாட்ரிக் பவுண்டரி விளாசிய தவான், ஒரு நாள் அரங்கில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். ஒன்றிரண்டு ஓட்டங்களைச் சேர்த்த கோஹலி 31 ஓட்டங் களில் ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி 50 ஓவரில், 7 விக்கெட்டுக்கு 331 ரன்கள் எடுத்தது. ஜடேஜா (47), புவ னேஷ்வர் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடின இலக்கை விரட்டிய தென் ஆபிரிக்க அணிக்கு கோலின் இங்ராம் (6) ஏமாற்றினார். உமேஷ்யாதவ் பந்தில் பவுண்டரிகளாக அடித்த ஹசிம் ஆம்லா (22) நிலைக்கவில்லை. புவனேஷ்வர் ஓட்டங்களில் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரி விளாசிய ராபின் பீட்டர்சன் அரைச் சதம் கடந்தார். இவர் 68 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இஷாந்த் பந்துவீச்சில், டிவிலியர்ஸ் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரி அடித்தார். இவரும் அரைச் சதம் கடக்க, அணியின் ஓட்டம் நல்ல முறையில் உயர்ந்தது. டுமினி (14) நீடிக்கவில்லை. இந்நிலையில், உமேசிடம் சிக்கிய டிவிலியர்ஸ் (70) ணுஷினர். கடைசி கட்டடத்தில் மார்னே (8) பெவிலியன் திரும்பினார். முடிவில், தென் ஆபிரிக்க அணி 50 ஓவரில் 305 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து தோல்வியடைந்தது. மெக்லார்ன் (71) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

# பொதுக்கூட்டம்

வட இந்து ஆரம்பப் பாடசாலையின் அபிவிருத்தி சங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் க.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் நடப்பு வருடத்திற்கான நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதால் சகல அங்கத்வர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் அன்றைய தினம் 11.30 மணிக்கு பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (109)




# பதவி வெற்றிடம்

## உதவி ஆசிரியர்

பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை. பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம். பொருத்தமானவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் இன்று வெள்ளிக்கிழமை (07.06.2013) பகல் 12.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

## பக்க வடிவமைப்பாளர்

Corel draw, page maker, Photoshop தெரிந்த பத்திரிகைத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
'தினமுரசு"
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

உலகில் எந்த மூலையிலும் உங்களுக்காக ஒரு தொழில்
வழிகாட்டலும் உடனடி வாய்ப்புக்களும்
08-06-2013 சனிக்கிழமை காலை 9.00மணி
@ சிகரம் விரிவுரை மண்டபம்
பிரவேசம் இலவசம்
முற்பதிவுகளுக்கு 0773 616 798
(C/2823)
சிகரம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
மி.அ.: edusikaram@gmail.com web: www.sikaram.lk

ENGLISH THE EASY WAY
Modern 5 Way Approach to English Language Learning
இலகுவழி ஆங்கில கற்கைநெறி
By: S.Muththulingam
சனி, ஞாயிறு காலை 9.00 - 11.00
செவ், வியா மாலை 3.00 - 5.00
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
☎ 021 222 0011
முதல் வகுப்பு இலவசம்
(C/2822)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.